# தேவனுடைய வார்த்தையே அற்புதமான விதை



தேவனுடைய வார்த்தையின் மூலம் இயற்கைக்கு
அப்பாற்பட்ட அவரது வல்லமையை அனுபவித்தல்

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2026

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617

**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**

**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

TCV எனக் குறிக்கப்பட்ட வேதவாக்கிய மேற்கோள்கள் அனைத்தும் இந்திய தமிழ் சமகால மொழிபெயர்ப்பு™ (Open Indian Tamil Contemporary Version™) வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. பதிப்புரிமை © 2005, 2020, 2022 பிப்ளிகா, இன்க்.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books

**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org

**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org

**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org

**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — God’s Word–The Miracle Seed)

# தேவனுடைய வார்த்தையே அற்புதமான விதை

தேவனுடைய வார்த்தையின் மூலம் இயற்கைக்கு
அப்பாற்பட்ட அவரது வல்லமையை அனுபவித்தல்

# பொருளடக்கம்


அறிமுகம்

1. தேவனுடைய வார்த்தை: நமது விசுவாசத்திற்கான அஸ்திபாரம் 1
2. தேவனுடைய வார்த்தை: அதன் தூய்மை மற்றும் வல்லமை 12
3. தேவனுடைய வார்த்தை: அற்புதமான விதை 26
4. விதை என்பது தேவனுடைய வார்த்தை 31
5. விதையானது இதயத்திற்குள் விதைக்கப்பட வேண்டும் 38
6. தேவனுடைய வார்த்தையைத் தியானித்தல் 45
7. விதையானது பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் 77
8. வெளிப்பாடு: ஆவிக்குரிய புரிதலைப் பெறுதல் 83
9. அறுவடையைத் தடுப்பவைகள்: வார்த்தைக்கு எதிர்ப்பு தெரிவித்தல் 89
10. அறுவடையைத் தடுப்பவைகள்: வார்த்தையை நெருக்கும் முட்கள் 93
11. மூன்று திறவுகோல்கள்: புரிந்துகொள், ஏற்றுக்கொள், தக்கவைத்துக்கொள் 97
12. வார்த்தையாகிய விதைகள் 104

# அறிமுகம்

நம் வாழ்வில் தேவனுடைய கிரியையை அனுபவிக்க வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். தனிப்பட்ட வாழ்விலும் மற்றவர்களுக்காகவும் இரட்சிக்கவும், குணப்படுத்தவும், விடுவிக்கவும் மற்றும் அற்புதங்களைச் செய்யவும் தேவனுடைய வல்லமையை நாம் நாடுகிறோம். பெரும்பாலும், நம்மை "ஆச்சரியத்துக்குள்ளாக்கும்" விதத்தில் காணப்படும், தேவனுடைய வல்லமையின் ஒரு அற்புதமான காட்சியை நாம் பார்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். தேவன், தம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால், அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் மூலம் தமது கிரியையை அற்புதமான வழிகளில் நடத்திக்காட்டுவார் என்பது உண்மைதான் என்றாலும், தேவன் தம்முடைய வார்த்தையாலும் கிரியை செய்கிறார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தேவ ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலம் தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார். நம் வாழ்வில் தேவனுடைய வார்த்தையை வாசித்தல், தியானித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல் போன்ற செயல்கள் அற்புதம் என்பதுபோல் தோன்றாவிட்டாலும், அது இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களுக்கு எவ்விதத்திலும் குறைவானது அல்ல, ஏனெனில் அதன் மூலமாகவும் தேவனே கிரியை செய்கிறார். அநேக விசுவாசிகள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் தேவன் தமது வார்த்தையின் மூலம் வெளியிட விரும்பும் இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையை தவறவிடுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் தொடர்ந்து அற்புதத்தைத் தேடுகிறார்கள்.

மற்றொரு பொதுவான பிரச்சனை என்னவென்றால்,

அநேக விசுவாசிகள் தேவனுடைய வல்லமையை தாங்கள் பெற்றுக்கொள்ளும்படியாக, அபிஷேகம் செய்யப்பட்ட தேவனுடைய மனுஷன் அல்லது மனுஷியை நோக்கிப் பார்க்கிறார்கள். தேவன் தமது ஆவியானவரின் வல்லமையால் மக்களுக்கு ஊழியம் செய்யும் அபிஷேகம் செய்யப்பட்ட ஊழியர்களைவைத்திருந்தாலும், படிப்படியாக, ஒவ்வொரு விசுவாசியும் அவருடைய வார்த்தையினாலும் அவருடைய ஆவியினாலும் தேவனிடமிருந்து நேரடியாக வல்லமையைப் பெறக் கற்றுக்கொள்ளும் இடத்திற்கு வர வேண்டும். இயேசு நம் அனைவரையும் நேரடியாகத் தம்மிடம் வரவும், அவரிடமிருந்து புசிக்கவும், அவரிடமிருந்து பருகவும் அழைப்பு விடுத்திருக்கிறார், இதனால் நாம் ஒவ்வொருவரும் அவருடைய கிருபையை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பவர்களாகவும், அவர்களை இயேசுவிடம் அழைத்துக்கொண்டு வருபவர்களாகவும் இருக்க முடியும், மற்றவர்களும் அவரிடமிருந்து நேரடியாக புசித்து பருகும்படி அவர்களுக்கு உதவவும் முடியும். நாம் இடைத்தரகர்களைச் சார்ந்து இருப்பவர்களாக மாறிவிடக்கூடாது.

தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் செயல்படுகிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர் சகலத்தையும் இவ்வாறு சிருஷ்டித்தார் – தம்முடைய வார்த்தையின் மூலம் வெளிப்பட்ட தமது வல்லமையால் சிருஷ்டித்தார். தேவனுடைய வார்த்தையானது நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு அவரது ஜீவனையும் வல்லமையையும் சுமந்து செல்கிறது. தேவன் தம்முடைய வார்த்தையை நமக்குக் கொடுத்திருக்கிறார், மேலும் தம்முடைய வார்த்தையின் வல்லமையின் மூலம் நம்மில் கிரியை செய்ய நாடுகிறார். அவருடைய வார்த்தையில் உள்ள ஜீவனும் வல்லமையும் நமக்குள் வெளிப்பட்டு, அவருடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியை நம்மில் நிகழும்படி, அவருடைய

வார்த்தையை எவ்வாறு பெறுவது என்பதையும் அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

தேவனுடைய வார்த்தையை தியானித்தல் என்பது வார்த்தையை நம் இதயங்களில் ஆழமாகப் பதிய வைக்கும் செயல்முறையாகும். தேவனுடைய வார்த்தையை தியானித்தல் என்பது சிந்தித்தல், மனக்கண்களால் காட்சியாகப்பார்த்தல்மற்றும்அறிக்கையிடுதல்ஆகியவற்றை உள்ளடக்கியது. தேவனுடைய வார்த்தையாகிய அற்புத விதையை உங்கள் வாழ்க்கையில் அதிகமாக விளைவிக்க தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதை எவ்வாறு பயிற்சி செய்வது என்பதை நீங்கள் கற்றுக்கொள்வீர்கள். இந்தப் புத்தகம், அவருடைய வார்த்தையான அற்புத விதை மூலம் நமக்குள் வெளிப்படுகிற தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைப் பெறவும் அனுபவிக்கவும் உதவும் எளிய சத்தியங்களை நமக்கு வெளிப்படுத்துகிறது.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆசிஷ் ராய்ச்சூர்

# 1

# தேவனுடைய வார்த்தை: நமது விசுவாசத்திற்கான அஸ்திபாரம்

நமது கிறிஸ்தவ பயணத்தில் ஒரு முக்கியமான அம்சம் உண்டு, அது நமது முழு கிறிஸ்தவ அனுபவத்தின் தரத்தையும் தீர்மானிக்கும் அளவுக்கு அவசியமானது. அதுதான் தேவனுடைய வார்த்தை. நமது வளர்ச்சியில் முதிர்ச்சியின் அளவும், தேவனிடத்தில் நாம் கண்டடையும் ஆழமான புரிதலும் நம் வாழ்வில் அவருடைய வார்த்தைக்கு நாம் கொடுக்கும் இடத்தைப் பொறுத்தே அமைகிறது. நாம் வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ்கிறோமோ இல்லையோ, நாம் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களின் அளவானது, நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய, மற்றும் நம் அன்றாட வாழ்க்கையில் தொடர்ந்து பயிற்சி செய்யக் கூடிய தேவனுடைய வார்த்தையின் அளவைப் பொறுத்தே அமையும்.

இருப்பினும், “நிகழ்வுகள்” நடந்தேறுவதற்கென்றே நியமிக்கப்பட்ட, அற்புதத்தைத் தேடி அதற்குப் பின்னால் ஒடும் ஒரு உலகில், பலரும் “பண்டைய புத்தகத்தின்” உள்ளடக்கங்களுக்கு கவனம் செலுத்தத் தயாராக இல்லை. சமூக ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் சம்பந்தமற்றது என்று சிலர் கூறும் ஒரு மத புத்தகத்திலிருந்து வெறும் வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு ஏன் ஒருவர் நேரத்தை செலவிட வேண்டும்? மேலும் வருத்தமளிக்கும் விதமாக, விசுவாசிகள் மத்தியில் கூட, “வேத தியான நேரத்தை” கடைப்பிடிப்பதைத் தவிர, எழுதப்பட்ட வேத வார்த்தைகள் ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் செல்வாக்கின் ஆழத்தைப் பற்றிய புரிதலைப்

பெற்றவர்கள் அநேகர் இல்லை. முதலாவது, வேதாகமம் உயிரற்றதாகத் தோன்றலாம், ஒருவேளை, சாதாரணமாக வாசிப்பவர்களுக்கு அது சலிப்பை ஏற்படுத்துவதாகக் கூட இருக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் அதன் உள்ளார்ந்த வல்லமையையும், தேவன் தம்முடைய ஜனங்களின் வாழ்க்கையில் தம்முடைய வார்த்தைக்கு ஒதுக்கியுள்ள இடத்தையும் புரிந்துகொண்டவர்களுக்கு, வார்த்தை ஜீவனுள்ளதாக இருக்கிறது! அவர்களுக்கு, வார்த்தையானது பலம், ஆறுதல், நம்பிக்கை, விசுவாசம், அறிவுறுத்தல் மற்றும் ஞானத்தின் ஊற்றாக இருக்கிறது. அவர்கள் வேத வசனம் என்ன சொல்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் நம்பியிருக்கிறார்கள். வாழ்க்கையின் புயல்களுக்கு மத்தியில், வார்த்தையானது அவர்களைத் தாங்கி, அவர்களைத் தூக்கி நிறுத்தும் என்பதை அவர்கள் அறிவார்கள். வியாதியின் மத்தியில், வார்த்தையானது குணப்படுத்தும் மற்றும் விடுவிக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். சவால்கள் மற்றும் நெருக்கங்களின்போது, வார்த்தையானது தங்களுக்கு வாக்களித்ததை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு அவர்கள் நம்பிக்கையுடன் நிற்கிறார்கள். வார்த்தையில் அவர்கள் காணும் சாத்தியக்கூறுகளின் நிமித்தம் அவர்கள் சாத்தியமற்ற சூழலைப் பார்த்து நகைக்க முடியும். அவர்களால் பார்க்கவோ, தொடவோ, கேட்கவோ, முகரவோ அல்லது சுவைக்கவோ முடியாதபோதும், அவர்கள் இன்னும் காரியங்களை அறிந்திருக்கிறார்கள், ஏனென்றால் வார்த்தையானது அவர்களுக்குள் ஒரு நம்பிக்கையான உறுதியையும், வலுவான, அசைக்க முடியாத நம்பிக்கையையும் உருவாக்கியுள்ளது.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் கர்த்தருடனான தங்கள் உறவில் இந்த உறுதியான நம்பிக்கையைப் பெற வேண்டும் என்பதே எங்கள் உள்ளான இதயத்தின் விருப்பமாகும். நீங்கள் ஏற்கனவே

வார்த்தையைக் குறித்த புரிதலை ஓரளவு பெற்றிருந்தால், நீங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

## நித்திய வார்த்தை, மாம்சமான வார்த்தை, எழுதப்பட்ட வார்த்தை

**லூக்கா 24:27**

**மோசே முதலான சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.**

நித்திய வார்த்தையாகிய தேவனுடைய குமாரனாகிய இயேசு (யோவான் 1:1-4), மாம்சமான வார்த்தையாக மாறி (யோவான் 1:14) வாழ்ந்து, எழுதப்பட்ட வார்த்தையான வேதவாக்கியங்களிலிருந்து பிரசங்கித்தார் மற்றும் கற்பித்தார். சிறு வயதிலிருந்தே, இயேசு வேதவாக்கியங்களைப் படிப்பதிலும் கற்றுக்கொள்வதிலும் ஈடுபட்டிருந்தார் (லூக்கா 2:46). எழுதப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்தி அவர் சோதனைகளை எதிர்த்தார் (மத்தேயு 4:1-10). மாம்சமாகி இவ்வுலகிற்கு வந்த வார்த்தையானவர் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, வேதவாக்கியத்தை நிறைவேற்றும் வண்ணம் நடந்தார் (லூக்கா 4:21; மாற்கு 14:49; லூக்கா 24:44). மாம்சமாக வெளிப்பட்ட தேவனாகிய, நித்திய வார்த்தையானவர் எழுதப்பட்ட வார்த்தையை இவ்வளவு மரியாதையுடன் கைக்கொண்டார் – இது ஒரு அற்புதமான சிந்தனை அல்லவா. அப்படியானால் நாம் இன்னும் எவ்வளவு அதிகமாக அதைக் கைக்கொள்ள வேண்டும்?

## பைத்தியமாய் தோன்றுகிற பிரசங்கத்தினால்

**1 கொரிந்தியர் 1:21**

**எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்க**

**தேவனுக்குப் பிரியமாயிற்று.**

தேவன், தமது ஞானத்தினாலே, ஒரு மனிதனின் வாழ்க்கையின் நித்திய வாழ்வு, சுவிசேஷ செய்தியின் எளிய பிரசங்கத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது என்று நியமித்திருக்கிறார். இதை சற்று கவனியுங்கள்! "இரட்சிப்புக்கு ஏற்ற தேவனுடைய வல்லமையைக் கொண்டிருக்கிற கிறிஸ்துவின் சுவிசேஷத்தை" எல்லா மனிதர்களுக்கும் கொண்டு செல்லும்படி, தேவன் தேவதூதர்களின் படையைத் தேர்ந்தெடுக்கவில்லை. அதற்கு பதிலாக, அழிவுள்ள, தவறு செய்யக்கூடிய பாத்திரங்களான, கிட்டத்தட்ட "பேதைகளைக்" கொண்டு பிரசங்கிப்பதன் மூலம், இழந்துபோனவர்களை மீட்டெடுக்க அவர் சித்தமுள்ளவராய் இருந்தார். எனவே, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் அல்லது மற்றவர்களுக்கு அறிவித்தல் மிகவும் முக்கியமானது. அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கியது போல, சிலர் செய்தியையும் அதைப் பிரசங்கிப்பதையும் முட்டாள்தனமாகக் கருதலாம். ஆனால் அழைக்கப்பட்டவர்களுக்கு, செய்தியும் அதன் பிரசங்கமும் தேவனுடைய வல்லமையும் ஞானமுமான கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது (1 கொரிந்தியர் 1:24). இதேபோல், எழுதப்பட்ட வேத வாக்கியங்கள் அனைத்தும் தேவனுடைய வல்லமையையும் ஞானத்தையும் நம் வாழ்வில் கொண்டு வரும் ஒரு கருவியாக இருக்க வேண்டும் என்று தேவன் நியமித்துள்ளார். நாம் வேதாகமம் என்று அழைக்கும் புத்தகத்தின் பக்கங்களில் பொறிக்கப்பட்ட வார்த்தைகள் மூலம், தெய்வீக வல்லமையும் ஞானமும் நம் வாழ்வில் பரவுகிறது என்பது கிட்டத்தட்ட ஒரு மறைபொருளாகத் தோன்றுகிறது. சாதாரண வார்த்தைகள், நம் அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் வார்த்தைகள், வேதாகமத்தில் அச்சிடப்பட்டதால், எப்படி திடீரென்று அது தெய்வீக மதிப்பைப் பெற்றிருக்க முடியும்? வார்த்தைகள் சாதாரணமானவைகளாக இருந்தாலும், அவை வழங்கும் சத்தியங்கள் தெய்வீகமானவையாக

இருக்கின்றன. வார்த்தைகளைக் கோர்த்து எழுதியது மனிதன்தான் என்றாலும், அதில் உள்ள சத்தியத்தை வெளிப்படுத்தியவர் தேவனே ஆவார். நாம் அவற்றைப் புரிந்துகொள்வதன் மூலமும் ஏற்றுக்கொள்வதன் மூலமும் தான் வேத வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் சத்தியங்களுக்குள், நாம் உள்ளே நுழைந்து தேவனுடைய ஞானத்தையும் வல்லமையையும் அனுபவிக்கிறோம்.

## வேதவாக்கியங்களெல்லாம் "தேவ ஆவியினால் அருளப்பட்டவை"

**2 தீமோத்தேயு 3:15,16**

**15 கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.**
**16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத்தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,**

அப்போஸ்தலனாகிய பவுல் "பரிசுத்த வேத வாக்கியங்களை" பற்றி குறிப்பிடும்போது, அவர் எழுதப்பட்ட வேதாகமத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். *"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது"* என்று கூறும்போது, அவர் எழுதப்பட்ட வேத வாக்கியங்களுக்கு தெய்வீக ஆசிரியர் உண்டு என்று எடுத்துரைக்கிறார். மனிதன் வார்த்தைகளை எழுதியிருந்தாலும், தேவனே அந்தச் செய்திக்கான மூலக்காரணராகவும் ஏவுதலாகவும் இருந்தார். அப்போஸ்தலனாகிய பேதுரு இதை சற்று வித்தியாசமான முறையில் வெளிப்படுத்துகிறார், *"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை;*

*தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்"* (2 பேதுரு 1:20,21). எல்லா வேதவாக்கியங்களும் தீர்க்கதரிசனமானவை, அதாவது அவை தேவனுடைய ஆவியின் ஏவுதலால் பிறந்தன. எழுதப்பட்ட வார்த்தை தெய்வீகமாக ஏவப்பட்டது. இந்த உண்மையை உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் விசுவாசிப்பது, வேதவாக்கியங்களைப் பற்றிய உங்கள் பார்வையை முற்றிலுமாக மாற்றும். எல்லா வேதவாக்கியங்களும் தேவனால் ஏவப்பட்டவை என்று நீங்கள் உண்மையிலேயே விசுவாசித்தால், உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு அதிக முன்னுரிமை கொடுப்பீர்கள். இவ்வுலகத்தைப் படைத்த தேவன் தம்முடைய எண்ணங்களை உங்களுக்குத் தெரிவிக்கிறார் என்பதை அறிந்து உங்கள் வேதாகமத்தைத் திறப்பீர்கள். அவருடைய எல்லையற்ற ஞானத்திலிருந்து, பூமியில் நம் வாழ்க்கைக்கு அவசியமானவை மற்றும் போதுமானவை என்று அவர் கருதியவற்றை வடிகட்டித் தேர்ந்தெடுத்து, அவற்றை வேத புத்தகத்தின் பக்கங்களில் வைத்துள்ளார். வேதவாக்கியங்கள் அனைத்தும் போதனை (உபதேசம்), கண்டித்து உணர்த்துதல், திருத்துதல் (கடிந்துகொள்ளுதல்) மற்றும் அறிவுறுத்தல்கள் போன்றவற்றை வழங்குகின்றன.

## வேதவாக்கியங்கள்—தேவனைப் பார்க்க உதவும் நமது ஜன்னல்

**சங்கீதம் 119:18**

**உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.**

வேத வாக்கியங்கள் ஜீவனுள்ள தேவனைப் பற்றிய ஆழமான புரிதலை நமக்கு வழங்குகின்றன. அவை தேவனுடைய சுபாவம், குணாதிசயங்கள், பண்புநலன்கள் மற்றும் இதயத்தை வெளிப்படுத்துகின்றன. வேத

வாக்கியங்களின் பக்கங்களில், தேவன் யார், அவர் என்ன செய்கிறார், அவரது உணர்வுகள் மற்றும் அவரது விருப்பங்கள் என்ன என்பவைகளைப் பற்றிய ஆழமான புரிதலைக் காண்கிறோம். இதன் விளைவாக, வேத வாக்கியங்களால் நாம் தேவனை அறிந்துகொள்கிறோம், அதன் மூலம் அவருடன் ஒரு தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக்கொள்கிறோம். உறவு அறிவை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கிறது. ஒருவரைக் குறித்து தனிப்பட்ட விதத்தில் அறிந்திராத இடத்தில், எந்த உறவும் நீடித்து இருக்க முடியாது. மேலும், பெற்றுக்கொண்ட அறிவின் ஆழம் அல்லது நெருக்கம் உறவின் ஆழத்தைத் தீர்மானிக்கிறது. எனவே, ஜீவனுள்ள தேவனுடன் ஆழமான மற்றும் நெருக்கமான உறவைப் பெற, ஒரு நபர் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டதைப் போலவே அவரை நெருக்கமாக அறிந்துகொள்ள வேண்டும். வேதாகமத்தின் பக்கங்களைத் திறப்பதே மிகவும் உற்சாகமான செயல், ஏனென்றால் அவை தேவனைப் பார்ப்பதற்கான நமது ஜன்னலாக இருக்கிறது. நாம் வாசிக்கும் வரிகளுக்குப் "பின்னால்" உள்ள அர்த்தத்தைப் பார்க்க நம் கண்கள் திறக்கப்படும்போது, நம் தேவனுடைய மகிமை மற்றும் மகத்துவத்தைப் பற்றிய புரிதலை நாம் பெற்றுக்கொள்கிறோம். தேவனைப் பற்றிய நமது புரிதல் வேறு எதை வேண்டுமானாலும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் – அது நமது அனுபவங்கள், மற்றவர்களின் கருத்துக்கள் மற்றும் பலவாக இருந்தாலும் – அவை எப்போதும் துல்லியமானதாக இருக்காது. தேவன் மற்ற இடங்களிலும் தம்மை வெளிப்படுத்துகிறார் என்பது உண்மைதான், உதாரணமாக, தமது சிருஷ்டிப்பின் மூலம் தம்மை வெளிப்படுத்துகிறார். இருப்பினும், மற்ற வெளி ஆதாரங்களிலிருந்து நாம் பெறும் எந்தத் தகவலும் முதலில் எழுதப்பட்ட வேத வாக்கியங்களின் வெளிச்சத்தில் ஆராயப்பட வேண்டும்.

## வேத வாக்கியங்கள்—நமது தரம், நமது மாதிரி

**சங்கீதம் 119:133**

**உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்.**

எது சரி மற்றும் எது தவறு என்பதற்கான திட்டவட்டமான தரநிலைகள் மக்களுக்கு இல்லாத இந்த உலகில், நாம் தேவனுடைய வார்த்தையை நமது தரமாக ஏற்படுத்தி வைத்துக்கொள்ள தேர்வு செய்கிறோம். வாழ்க்கையின் அனைத்து விஷயங்களைப் பற்றியும் வேதம் சொல்வது உண்மை என்று நாம் கருதுகிறோம். தேவனுடைய வார்த்தை எதை சரி மற்றும் உத்தமம் என்று சொல்கிறதோ, அதை நாம் சரி மற்றும் உத்தமம் என்று கருதுகிறோம். வேத வசனம் எதைத் தவறு என்று சொல்கிறதோ, நாமும் அதை தவறு என்று கருதுகிறோம். வேத வாக்கியங்கள் வகுத்துள்ள ஒழுக்கத் தரங்களை நாம் “பகுத்தறியவோ” (காரணம் தேடுதல்), “கட்டுப்பாடுகளைத் தளர்த்தவோ” (பரந்த மனப்பான்மையுடன் இருக்க முயற்சித்தல்) அல்லது “சூழலுக்கு ஏற்றவாறு மாற்றவோ” (கலாச்சார ரீதியாக அல்லது சமூக ரீதியாக பொருத்தமானதாக மாற்றுதல்) முயற்சி செய்வதில்லை. வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தை விடக் குறைவான தரத்தையுடைய செயல்கள் எதற்கும் நாங்கள் இணங்குவதில்லை.

தேவனுடைய வார்த்தையே நமக்கு வழிகாட்டியாக இருக்கிறது. வேதவசனங்களில் உள்ள அறிவுறுத்தல்களின்படி, நம் வாழ்க்கையை நாம் வடிவமைக்கிறோம். பொதுவாகவே, கணவன்மார்கள், மனைவிமார்கள், பெற்றோர்கள், குழந்தைகள், முதலாளிகள், வேலைக்காரர்கள், ஊழியர்கள் மற்றும் அனைத்து விசுவாசிகளுக்கும் நடத்தைக்கான மாதிரிகளை வேதவசனங்கள் வகுத்துள்ளன. பரிசுத்த ஆவியானவரின் பலத்தால், வேதவசனங்களில் உள்ள கொள்கைகளின்படி

நமது நடத்தை, நமது வாழ்க்கை முறைகள், நமது மதிப்புகள், நமது நம்பிக்கைகள் மற்றும் நமது இலக்குகள் மற்றும் லட்சியங்களை வடிவமைக்க நாம் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். அவருடைய வார்த்தையால் நம் முழு வாழ்க்கையையும் நாம் வாழ்கிறோம்.

## வேத வசனங்கள்—நமது அதிகாரம்

**சங்கீதம் 119:101**

**உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்.**

நம் வாழ்வின் மீதான முழு அதிகாரத்தையும் நாம் வேதவாக்கியங்களுக்குக் கொடுப்பதன்மூலம் கீழ்ப்படிகிறோம். மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு அமைப்பும் அல்லது சட்டமும் நம்மைத் திருத்தாவிட்டாலும் கூட, நாம் வார்த்தையின் திருத்தத்திற்குக் கீழ்ப்படிகிறோம். சில சமயங்களில் வேறு ஒருவர் நம் தவறுகளைச் சுட்டிக்காட்டுவது அவசியம் என்றாலும், அவர்கள் நம் தவறை சுட்டிக்காட்டும் வரை நாம் காத்திருக்க மாட்டோம். வேத வார்த்தையானது தவறு என்று கூறும் விஷயங்களை நாம் செய்வதாக உணரும்போது, வார்த்தைக்குக் கீழ்ப்படியும்படி நம்மில் மாற்றங்களைச் செய்யத் தயாராக இருக்கிறோம். வார்த்தைக்கு ஒத்த வாழ்க்கையை வாழும்படி நம் வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதைத் தேர்வு செய்கிறோம். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவது, உண்மையில், தேவனுக்கே கீழ்ப்படிவதாகும். வேதவாக்கியங்களின் ஆலோசனைக்கு எதிராகக் கலகம் செய்வது, தேவனுக்கு எதிராகக் கலகம் செய்வது போன்றதாகும். கர்த்தராகிய இயேசு கூறினார், *“என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன – வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்”* (யோவான் 12:48). தேவனுடைய வார்த்தையே எல்லா மனிதர்களும்

நியாயத்தீர்ப்பு அடைவதற்கான சட்டமாக இருக்கும்.

தேவ ஜனங்கள் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையின் மீது மரியாதையுடன் கூடிய பயபக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டிய நேரம் இது. நம் வாழ்வில் அவருடைய வார்த்தையின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் நாம் அவரைப் பின்பற்றுபவர்களாக இருக்க முடியாது. சரீரத்துக்கு மகிழ்ச்சிகரமானதாகவோ அல்லது நம் பகுத்தறிவுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவோ இருக்கிறது என்பதற்காக, இந்த வேத வசனங்களுக்கு முரணானவற்றைச் செய்துகொண்டே இருந்தால், நாம் "உறுதியான விசுவாசிகளாக" இருக்க முடியாது. விசுவாசிகளாக, நம் உணர்வுகளையும் பகுத்தறிவையும் வார்த்தைக்குக் கீழ்ப்படியும்படி, அவற்றைக் கீழ்ப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொரு தீமைக்கும் நம்மை விலக்கி, அவருடைய வார்த்தையுடன் நம்மை இணைத்துக் கொள்கிறோம், ஏனெனில் அதுவே இறுதி அதிகாரத்தை உடையதாய் இருக்கிறது.

## வார்த்தை உங்களுக்குள் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

**கொலோசெயர் 3:16**

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி**

தேவனுடைய வார்த்தை நமது விசுவாசத்தின் அடித்தளமாகும். அது ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் இன்றியமையாத மூலப்பொருளாய் உள்ளது. நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும், அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருக்க வேண்டும் (யோவான் 15:7). கிறிஸ்துவின் வார்த்தை உங்களில் பரிபூரணமாக வாழ உதவுவதே எங்கள் கடமையாகும்.

வேத வசனங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கும், படிப்பதற்கும், தியானிப்பதற்கும் அதிக நேரம் செலவிடுங்கள். ஆழமான புரிதல் மற்றும் வெளிப்பாட்டிற்காக பரிசுத்த ஆவியானவரிடம் மன்றாடுங்கள். உங்கள் இருதயத்தில் அறிவின் வெளிப்பாட்டின் அளவு மிகுதியாக வைத்துவைக்கப்படுவதாக. நீங்கள் கற்றுக்கொண்டதை அடிக்கடி ஆராய்ந்து பாருங்கள். தேவ ஆவியானவர் உங்கள் புரிதலுக்குக் கொண்டு வந்த ஆவிக்குரிய சத்தியங்களை மீண்டும் மீண்டும் நினைவூட்டுங்கள். கர்த்தருக்கு தனிப்பட்ட சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் பாடல்களைப் பாட வார்த்தையைப் பயன்படுத்துங்கள். வார்த்தையில் உபதேசிக்கப்படும்படி மற்ற விசுவாசிகளுக்குக் கற்பியுங்கள் மற்றும் அவர்களை ஊக்குவியுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தப்பட்ட அறிவு எல்லாவற்றையும் நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள். இவ்வாறு, உங்கள் கிறிஸ்தவ அனுபவத்தைக் கட்டி எழுப்பக்கூடிய ஒரு உறுதியான அடித்தளத்தை நீங்கள் ஏற்படுத்துவீர்கள்.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கும் ஒரு நபர், உறுதியான நிலத்தின் மீது தன் வீட்டைக் கட்டிய புத்தியுள்ள நபரைப் போன்றவன் ஆவான் (மத்தேயு 7:24,25).

நீங்கள் உங்கள் வாழ்க்கையை எப்படிப்பட்ட அஸ்திபாரத்தின் மீது கட்டுகிறீர்கள்?

# 2

# தேவனுடைய வார்த்தை: அதன் தூய்மை மற்றும் வல்லமை

இந்தியாவில் உள்ள மணிப்பால் மாநிலத்தில் எனது நான்கு வருட கல்லூரிப் படிப்பின் இறுதியில், பல சுவாரஸ்யமான விஷயங்கள் நடந்தன. எல்லாவற்றிலும் மிக முக்கியமானது என்னவென்றால், – சாதாரண கல்லூரி மாணவர்களான – எங்களில் சிலர் ஒன்றாகச் சேர்ந்து பணி செய்யவும், இறுதியில் மாணவர் சமூகத்தில் ஒரு வலுவான கிறிஸ்தவ ஐக்கியமாக வளர அடித்தளம் அமைக்கவும் தேவன் உதவி செய்தார். அது கல்வியாண்டின் இறுதியில் நடந்தது, என் நண்பர்களில் பலர் தங்கள் வீட்டிற்குச் சென்றிருந்தனர். இந்த நேரத்தில் விடுதிகள் வழக்கத்திற்கு மாறாக அமைதியாக இருக்கும் என்பதை அறிந்த நான், சில நாட்கள் அங்கேயே தங்கி, கர்த்தருடன் தனியாக சிறிது நேரம் செலவிட முடிவு செய்தேன். நிறைய விஷயங்கள் எனக்குத் தெரியாமல் இருந்தபோதிலும், என் எதிர்காலத்தைப் பற்றியும், எனக்கு முன்னால் இருக்கும் விஷயங்களைப் பற்றியும் ஜெபிக்க விரும்பினேன். இந்த ஜெபிக்கும் காலகட்டத்தில்தான் ஏசாயா 45:1-3 வரையுள்ள வசனங்கள் என் ஆவியில் ஆழமாகப் பதிந்தன. எனக்கு, இவை மூலைக்கல் வசனங்களாக மாறின – என் இதயத்தில் ஒரு சிறப்பு இடத்தைப் பிடிக்கும் வசனங்களாக மாறின. அவற்றின் அர்த்தத்தையும் அவை என் வாழ்க்கையில் எவ்வாறு பொருந்தும் என்பதையும் நான் புரிந்துகொண்டேன்.

இந்த வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதியாக, கர்த்தர் எங்களுக்கு முன்பாகச் சென்று எங்களுக்குக் கதவுகளைத் திறப்பார் என்றும், இந்தக் கதவுகள் மூடப்படாது

என்றும் கூறினார். அப்போதிருந்து, நான் சாத்தியமற்ற தன்மைகளையும் மூடிய கதவுகளையும் நேருக்கு நேர் சந்தித்த பல சந்தர்ப்பங்கள் உள்ளன. பல்கலைக்கழகங்களில் சேருதல் மற்றும் நிதி உதவி பெறுதல் அல்லது நாடுகளுக்குள் நுழைய விசா பெறுதல் அல்லது தனிப்பட்ட நிதி நெருக்கடிக்குப் பின் அதை கையாள எழுதல், மற்றும் பல சூழ்நிலைகளில், நான் இந்த வசனங்களுக்குத் திரும்பி வந்து தேவன் வாக்களித்ததைச் செய்வார் என்பதை அறிக்கையிட்டு அவருக்கு முன்பாக நின்றேன். நான் இந்த வேத வசனங்களை எடுத்து, கிறிஸ்துவில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தால், சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் மீது அவற்றைப் பொருத்தி, அந்தச் சூழல் மாறுவதைக் கண்டிருக்கிறேன். பகுத்தறியும் மனதிற்குப் புத்தியீனமாகவும், இன்னும் சொல்லப்போனால், முட்டாள்தனமாகவும் கூட தோன்றக்கூடிய அளவிற்கு, நான் இந்த வசனங்களின் தூய்மையையும் வல்லமையையும் அப்படியே நம்பியிருக்கிறேன். தேவனுடைய வார்த்தை ஒருபோதும் நிறைவேறாமல் போனதில்லை என்பதற்கு நான் மகிழ்ச்சியுடன் சாட்சியளிக்கிறேன்! இதேபோல், தாங்கள் எதிர்கொண்ட சவால்களை, தேவனுடைய தவறாத வார்த்தையின் மீது மட்டுமே அவர்கள் எவ்வாறு நம்பிக்கை வைத்து, தேவனுடைய வார்த்தையின் வல்லமையால் அவற்றை எவ்வாறு வெற்றிகரமாகக் கடந்து வந்தனர் என்பதற்கான சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய அநேகர் இந்த உலகம் முழுவதும் உள்ளனர்!

நாம் அடையக்கூடிய ஒரு இடம் இருக்கிறது – தேவனுடைய விலையேறப்பெற்ற வார்த்தையை நாம் நேசித்து கனம்பண்ணும் இடம்தான் அது; தேவனுடைய வார்த்தையில் உள்ள உண்மை மற்றும் வல்லமையில் நம் இதயங்கள் சந்தேகமின்றி முற்றிலும் நம்பிக்கையால் பிடிக்கப்பட்ட இடம்தான் அது; வேறு எதையும் விட அவருடைய வார்த்தையை நாம் அதிகமாக மதிக்கும்

இடம்தான் அது; வார்த்தையானது நம் குணத்தை மாற்றி, நம் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்தி மற்றும் நம் செயல்களை சரியான பாதையில் வழிநடத்தக் கூடிய இடம்தான் அது; வார்த்தையிலிருந்து கிடைக்கும் ஆவிக்குரிய புரிதலுக்காக நம் இதயங்கள் ஏங்கும் மற்றும் பசியுடன் இருக்கும் இடம்தான் அது; வேத வாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி அவரது மகத்துவத்தை இன்னும் அதிகமாகக் காண நாம் ஏங்கும் இடம்தான் அது; தேவனுடைய வார்த்தையிலிருந்து கிடைக்கும் தூய்மையான மகிழ்ச்சியின் இடம்தான் அது.

இந்த இடத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பதன் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியை நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டும் என்பதே எங்கள் ஜெபமாகும்.

## தேவனுடைய ராஜரீக கரம்

**ரோமர் 11:33**

**ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!**

தேவனுடைய வழிகள் "ஆராய்ந்து முடியாதவை" அல்லது மனித புரிதலுக்கு அப்பாற்பட்டவை. தேவனுடைய ராஜரீக கரம் மனித வரலாற்றின் போக்கில், பெரும்பாலும் மிகவும் முக்கியமற்றதாகவும் தெளிவற்றதாகவும் தோன்றும் வழிகளில் செயல்பட்டு வந்திருக்கிறது, மற்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. பெரும்பாலும், தேவனுடைய கிரியை அதிகமாக இவ்வுலகத்துக்குரியதாகவும், மிகவும் சாதாரணமானதாகவும் இருக்கலாம், ஆனாலும், அவை தேவனுடைய கரத்தின் கிரியையான ஆச்சரியமான அற்புதங்களுக்கு எவ்விதத்திலும் குறைவானது அல்ல. மோசே தனது கோலால் கன்மலையை அடித்தபோது, ஒரு நொடியில் கற்பாறையிலிருந்து தண்ணீரை வெளியே வரவழைத்த அதே தேவன், பெசலயேலும் அவனுடைய சக

ஊழியர்களும் வனாந்தரத்தில் கூடாரத்தைக் கட்டுவதில் ஒவ்வொரு நாளும் உழைத்தபோது அவர்கள் மூலமாகவும் செயல்பட்டார் (யாத்திராகமம் 31:1-11). மனிதனுடைய மனதிற்கு, பெசலயேலும் அவருடைய கைவினைஞர்களின் குழுவினரும் கடின உழைப்புடன் செய்த வேலை தேவனுடைய கிரியை என்பதை ஏற்றுக்கொள்வது கடினமாகத் தெரிகிறது. ஆனாலும், கூடாரத்திற்காக தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலத்தில் கலைநயமுள்ள படைப்புகளை வடிவமைக்க இந்த கைவினைஞர்களை ஞானம், புரிதல் மற்றும் அறிவால் நிரப்பியவர் தேவ ஆவியானவர்தான்.

இந்த எளிய உதாரணத்தின் மூலம், தேவன் தமது தெய்வீக நோக்கங்களை சாதாரண மக்களின் வாழ்க்கை மூலம் செயல்படுத்தி வருகிறார் என்று நாம் நம்பிக்கையுடன் கூறலாம். எனவேதான், கிறிஸ்தவ வேதாகமத்தின் 66 புத்தகங்களின் தொகுப்பில் இதுவும் சேர்க்கப்பட்டுள்ளது. வேதவசனங்களை ஒன்று சேர்க்கும்போதும் பரிசுத்த வேதமாக அறிவிக்கும் போதும் கூட தேவனுடைய ராஜரீக கரம் அங்கே செயல்பட்டது. அத்தகைய கூற்றின் கால செல்லுபடியை மனித மனம் கேள்வி கேட்கலாம். ஆனால் மனிதன் தனது அன்றாட வேலைகளைச் செய்யும்போது கூட, தேவன் தமது கிரியையை அமைதியாகச் செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்பவர்களுக்கு, இது ஒரு மாறாத உண்மையாகும்!

## அவருடைய நாமத்துக்கும் மேலான இடம்

**சங்கீதம் 138:2**

**உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.**

தேவன் தம்முடைய நாமத்தை விட தம்முடைய

வார்த்தைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். தம்முடைய நாமத்தை விட தம்முடைய வார்த்தையை உயர்த்தியுள்ளார். தேவனுக்கு, அவர் பேசிய அவருடைய வார்த்தையானது, அவருடைய நற்பெயரை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஏனென்றால் அவருடைய நாமம் – அவருடைய நற்பெயர் – அவருடைய வார்த்தையைப் போலவே சிறந்ததாகும்! நாம் இதைப் பற்றிய ஒரு புரிதலைப் பெற்றிருக்க வேண்டும். அவரது நற்பெயர் அவரது வார்த்தையைச் சார்ந்தது. அவரது நாமம் அதன் மகிமையையும் கனத்தையும் அவரது வார்த்தையிலிருந்தே பெறுகிறது. இதில் இரண்டு முக்கியமான உள்ளான கருத்துக்கள் உள்ளன.

## *1) தேவன் சார்பில்*

அவர் தம்முடைய வார்த்தையை தம்முடைய நாமத்திற்கு மேலாகஉயர்த்தியிருப்பதால்,அவர்தம்முடையவார்த்தையை தம்மைக் கொண்டே நிலைநிறுத்துவார். தேவனுடைய வார்த்தையானது, தேவனுடைய சர்வவல்லமை, சர்வவியாபி மற்றும் சர்வ ஞானத்தால் ஆதரிக்கப்படுகிறது. அவர் இவ்வாறு கூறினார், *"அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே; என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன்"* (எரேமியா 1:12).

## *2) நமது சார்பில்*

கர்த்தருடைய நாமத்தை மட்டுமல்ல, அவருடைய வார்த்தையையும் அறிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். நாம் அவருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிட்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 10:13). இப்போது, தேவன் தாமே தம்முடைய நாமத்தை விட தம்முடைய வார்த்தைக்கு அதிக கனத்துக்குரிய இடத்தைக் கொடுத்திருப்பதால், நாம் அவருடைய வார்த்தையைத்

தொடர்ந்து அறிந்துகொள்ள வேண்டும்.

## தேவனுடைய வார்த்தை அவருடைய குணத்தைப் போலவே வலிமையானது

**எபிரெயர் 6:11-18**

**11நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து,**
**12உங்களுக்கு நம்பிக்கையின் பூரணநிச்சயமுண்டாகும்படி நீங்கள்யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.**
**13ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமதுபேரிலே தானே ஆணையிட்டு:**
**14நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப்பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார்.**
**15அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெற்றான்.**
**16மனுஷர் தங்களிலும் பெரியவர்பேரில் ஆணையிடுவார்கள்; உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு.**
**17அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.**
**18நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப்பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.**

தேவன் ஆபிரகாமுக்கு ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுத்தபோது, தம்மைக் குறித்தே ஆணையிட்டுத் தம் வாக்குத்தத்தத்தை ஆதரித்தார். *“நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருவே பெருகப்பண்ணுவேன்” என்று அவர் கூறினார்.* தேவன் *“இரண்டு மாறாத விஷயங்களை”* ஆபிரகாமுக்குக் கொடுத்தார்—ஒன்று அவருடைய வாக்குத்தத்தம் (வார்த்தை),

மற்றொன்று அவரது ஆணை. *"நான் செய்வேன் ..."* என்று தேவன் சொல்லும் போதெல்லாம், அவர் நமக்கு இரண்டு மாறாத விஷயங்களைத் தருகிறார் – ஒன்று அவருடைய வாக்குத்தத்தம் (அவருடைய வார்த்தை) மற்றும் அந்த வாக்குத்தத்தத்தை ஆதரிப்பதற்கான அவரது ஆணை (சபதம், உறுதிமொழி). தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் (வாக்குத்தத்தமும்) ஒரு சத்தியப்பிரமாணமாகவும் மரியாதைக்குரிய வார்த்தையாகவும் இருக்கிறது, ஏனெனில் அது ஒரு வாக்குத்தத்தம் மற்றும் ஒரு ஆணையாகும். *"அவர் தம் மீதே ஆணையிட்டார்."* தேவனுடைய உறுதிமொழி அவரது சுய விருப்பத்தை சார்ந்தது. அவரது சுய விருப்பத்தைப் போல மாறாதது வேறு எதுவும் இல்லை, ஏனென்றால் அவர் தேவனாக இருக்கிறார், மேலும் அவரது குணம் மாறாது. *"நான் கர்த்தர், நான் மாறாதவர்"* (மல்கியா 3:6) என்று அவர் கூறினார். ஆகையால், தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய மாறாத குணத்தால் ஆதாரத்தைப் பெற்றிருக்கிறது. மேலும் தேவனுடைய குணத்தின் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், தேவனால் பொய் சொல்ல முடியாது.

அவர் "பொய்யுரையாத தேவன்" (தீத்து 1:2) ஆவார். அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். *"உம்முடைய வசனமே சத்தியம்"* (யோவான் 17:17b) என்று இயேசு சொன்னது போல், அவரது வசனம் சத்தியமாகும். தேவனுடைய மாறாத குணத்தின் இந்த அம்சத்தில் நிலைத்திருக்கும் இடத்திற்கு நாம் வர வேண்டும். அவரால் ஒருபோதும் பொய் சொல்ல முடியாது என்பதை நாம் அறிவோம், எனவே, அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் முற்றிலும் சத்தியம். *"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?"* (எண்ணாகமம் 23:19). இதைக் குறித்த நிச்சயம் நமக்கு இருக்கும்போது, வேதாகமம் கூறுவது

போல், நமக்கு *"நிறைந்த ஆறுதல்"* அல்லது இந்திய சமகால தமிழ் மொழிபெயர்ப்பில் சொல்லப்பட்டதுபோல், நம்மிடம் *"உள்ளார்ந்த வலிமை மற்றும் வெகுவாய் ஊக்குவித்தலை"* (எபிரெயர் 6:18, TCV) நாம் பெற்றிருக்கிறோம்.

## சுத்த சொற்கள்

**சங்கீதம் 12:6**

**கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தச் சொற்களாயிருக்கிறது.**

நமது தேவன் சத்தியமுள்ள தேவனாய் இருக்கிறார். அவரது வார்த்தைகள் உண்மையான வார்த்தைகள், சுத்த வார்த்தைகள். தேவனுடைய வார்த்தை பிழையற்றது. *"உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம்"*(சங்கீதம் 119:160a). *"தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் ... அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப்போகவில்லை"* (1 இராஜாக்கள் 8:56b). அவற்றை உறுதியான நம்பிக்கையுடன் விசுவாசிக்கலாம். அவருடைய வாக்குத்தத்தங்களை நிபந்தனையின்றி நம்பலாம், அவருடைய அறிவுரைகளை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளலாம். தேவனுடைய வசனம் வானத்தில் என்றென்றும் நிலைத்திருக்கிறது (சங்கீதம் 119:89). அவை மாற்றப்படவோ திருத்தப்படவோ மாட்டாது, ஏனென்றால் அவர் ஒருபோதும் தமது உடன்படிக்கையை மீறவோ அல்லது அவர் பேசியதைத் திரும்பப் பெறவோ மாட்டார் (சங்கீதம் 89:34). அவருடைய வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும் (1 பேதுரு 1:23). அவருடைய வார்த்தை வலுவான பாதுகாப்புக்கான இடமாகும், ஏனென்றால் அதைப் போல தூய்மையானது, உறுதியானது மற்றும் நீடித்து நிலைக்கக் கூடியது வேறு எதுவும் இல்லை.

## தேவனுடைய வார்த்தையானது தேவனுடைய வல்லமையை சுமந்து செல்லும் ஒரு சாதனம்

**எபிரெயர் 11:3**

**விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

**எபிரெயர் 1:3a**

**இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், ...**

**எபிரெயர் 4:12**

**தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**

இந்த அகில உலகத்தையும் தேவன் வெறுமனே பேசுவதன் மூலம் உருவாக்கினார் என்று வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது. காலப்போக்கில் விஷயங்கள் ஒரே இடத்தில் ஒன்றாக வந்து சேர்ந்து இணைந்தன என்று "பிக் பேங் கோட்பாடு" மற்றும் பிற கோட்பாடுகளின் ஆதரவாளர்கள் கூறுவதை நம்புவதை விட, இதை நம்புவது மிகவும் நியாயமானது. *"உலகங்கள் தேவனுடைய வார்த்தையால் உருவாக்கப்பட்டன"* என்பதை நாம் புரிந்துகொள்கிறோம் இப்பிரபஞ்சம் தேவன் பேசிய வார்த்தைகளால் உருவாக்கப்பட்டது, கட்டமைக்கப்பட்டது, வடிவமைக்கப்பட்டது மற்றும் அழகாக வடிவமைக்கப்பட்டது. *"காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை"* (எபிரெயர் 11:3) — அதாவது, காணக்கூடியவை கணப்படாதவற்றால் ஆனது. இயற்கை மண்டலமானது ஆவிக்குரிய

மண்டலத்திலிருந்து வந்தது. இது நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு வல்லமைவாய்ந்த உண்மை. தேவனுடைய வார்த்தை என்பது காணக்கூடிய இயற்கை உலகத்தை இருத்தலுக்குக் கொண்டுவந்த கண்ணுக்குத் தெரியாத, ஆவிக்குரிய பொருளாகும். தேவனுடைய உரைக்கப்பட்ட வார்த்தையால் அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டது மட்டுமல்லாமல், எபிரெயர் 1:3ஆம் வசனத்தின்படி, அனைத்தும் வார்த்தையால் நிலைநிறுத்தப்படுகின்றன. அகில உலகம் முழுவதும் தேவனுடைய வார்த்தையால் நிலைநிறுத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு, நேர்த்தியாக வைக்கப்படுகிறது.

தேவனுடைய வார்த்தை தேவனுடைய வல்லமையால் நிறைந்துள்ளது என்பதை நாம் உணரும்போது இந்த உண்மையைப் புரிந்துகொள்கிறோம். இயற்பியலில், ஒளியின் தன்மை பற்றிய கோட்பாடுகளில் ஒன்று, ஒளி ஃபோட்டான்களைக் கொண்டுள்ளது என்பதை விளக்குகிறது. ஃபோட்டான்கள் ஆற்றல்-தொகுப்புகளாகும். இந்த ஃபோட்டான்கள் பொருத்தமான இலக்குகளைத் தாக்கும்போது, அவை அவற்றின் ஆற்றலில் சிலவற்றை வெளியிடுகின்றன. இதேபோல், நம் மனதில், தேவனுடைய வார்த்தையை சர்வவல்லமையுள்ள தேவனுடைய சர்வ வல்லமையைச் சுமந்து செல்லும் ஆற்றல்-தொகுப்புகளாக நாம் கற்பனை செய்யலாம். தேவனுடைய வார்த்தை இந்த தெய்வீக ஆற்றலை வெளியிடுகிறது மற்றும் தேவனுடைய சிருஷ்டிப்பு பணிகள் நடக்க காரணமாகிறது.

தேவன் இந்த முழு பிரபஞ்சத்தையும் தமது வார்த்தையின் வல்லமையால் உருவாக்கினார் என்றால், தற்போது இல்லாதவற்றை நம் வாழ்வில் அவரால் உருவாக்க முடியாதா? நோய் இருக்கும் இடத்தில், தேவன் தமது வார்த்தையின் வல்லமையால் குணப்படுத்துதலையும் ஆரோக்கியத்தையும் உருவாக்க முடியும். தேவை இருக்கும் இடத்தில், தமது

வார்த்தையின் வல்லமையால், தேவன் தேவையானவற்றை வழங்கவும் விநியோகம்பண்ணவும் முடியும். தேவனுடைய சிருஷ்டிப்பின் வல்லமை அவரது வார்த்தையில் உள்ளது. எனவே, தேவனுடைய வார்த்தையால் விஷயங்களை உருவாக்க (கொண்டுவர) முடியும், அதாவது அவை தற்போது நம் வாழ்வில் இல்லாவிட்டாலும் தேவன் அவற்றை நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார்.

தேவன் இந்த அகில உலகத்தையும் உருவாக்கவும், கட்டமைக்கவும், வடிவமைக்கவும் தமது வார்த்தையைப் பயன்படுத்தினார். தேவனால் தமது வார்த்தையைப் பயன்படுத்தி நமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் உருவாக்கவும், கட்டமைக்கவும், வடிவமைக்கவும் முடியாதா? நமது நிகழ்காலத்தை மாற்றவும், நமது எதிர்காலத்தை வடிவமைக்கவும் கூடிய வல்லமை தேவனுடைய வார்த்தைக்கு உண்டு.

இந்த அகில உலகம் முழுவதும் தேவனுடைய வார்த்தையால் நிலைநிறுத்தப்பட்டு, ஆதரிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்படுகிறது. அப்படியானால், தேவனுடைய வார்த்தையால் நம் வாழ்க்கையையும் நிலைநிறுத்த, ஆதரிக்க மற்றும் ஒழுங்குபடுத்த முடியாதா? பூமியில் நம் வாழ்க்கையைப் பற்றிய விஷயங்களை நிலைநிறுத்த, ஒழுங்குபடுத்த மற்றும் சீர்படுத்த தேவனுடைய வார்த்தைக்கு போதுமான மற்றும் தேவைக்கும் அதிகமான வல்லமை உண்டு.

## வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ளுதல்

**ரோமர் 4:18**

**உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.**

வார்த்தையின் தூய்மையையும் வல்லமையையும்

புரிந்துகொள்வது, அதை விசுவாசிப்பதற்கு நமக்கு வலுவான நம்பிக்கையைத் தருகிறது. தேவனுடைய வார்த்தை சத்தியம், எனவே, வார்த்தையில் நமக்கு வாக்களிக்கப்பட்டதை நாம் எதிர்பார்க்கலாம். தேவனுடைய வார்த்தை முழுவதும் வல்லமையால் நிறைந்துள்ளது, எனவே, அவருடைய வார்த்தைக்கு நம் வாழ்வில் உருவாக்கத்தக்க வல்லமை உண்டு என்று நாம் நம்பிக்கையுடன் இருக்கலாம். நம்புவதற்கு ஏதுவான அனைத்து காரணங்களுக்கும் நமக்கு எதிராக இருந்தாலும், ஆபிரகாமைப் போலவே, தேவன் சொன்னபடியெல்லாம் நாம் ஆகிவிடுவோம் என்று நாம் இன்னும் விசுவாசத்தில் நம்புவோம். தேவனுடைய வார்த்தையின் தூய்மையையும் வல்லமையையும் நாம் புரிந்துகொண்டதால் இதைச் செய்கிறோம். அவருடைய வார்த்தை நிறைவேறாமல் போகாது என்பதை நாம் அறிவோம்.

நம்மில் சிலர் பொருளாதார ரீதியாக கடினமான காலங்களை எதிர்கொண்டிருக்கலாம். நமது அன்றாடத் தேவைகளைப் பொறுத்தவரை விஷயங்கள் எப்போதாவது மாறுமா என்று நாம் யோசிக்கிறோம். நமது அனைத்துப் பொருளாதாரத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என்று தேவன் வாக்களித்துள்ளார். *“என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்”* (பிலிப்பியர் 4:19) என்று அவர் வாக்களித்துள்ளார் என்பது நமக்குத் தெரியும். “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” (மத்தேயு 6:33) என்பதை நாம் அறிவோம். நம்மிடம் உள்ளதைக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தும்போது, அவர் நம்மைப் பெருகச் செய்வார் என்பதை நாம் அறிவோம் (நீதிமொழிகள் 3:9,10; மல்கியா 3:9-11). இந்த வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றும் தூய்மையானவை

மற்றும் தெய்வீக வல்லமையால் நிறைந்தவை என்பதை அறிந்து, அவற்றை விசுவாசத்தில் பற்றிக்கொள்கிறோம். பொருளாதார ஆசீர்வாதங்களின் சிருஷ்டிப்பு அற்புதங்களை நம் வாழ்வில் வெளிப்படுத்தவும், நம் சூழ்நிலைகளை மாற்றவும் இந்த வார்த்தைகளில் (வாக்குத்தத்தங்கள்) போதுமான வல்லமை உள்ளது என்பதை நாம் அறிவோம். அவருடைய வாக்குத்தத்தங்களில் நாம் தொடர்ந்து நிற்கிறோம்.

சிலர் தங்கள் எதிர்காலத்திற்காக தேவனை நோக்கிக் காத்துக்கொண்டிருக்கலாம். விஷயங்கள் தெளிவற்றதாகவும், நிச்சயமற்றதாகவும், ஒருவேளை நம்பிக்கையற்றதாகவும், இருண்டதாகவும் தோன்றினாலும் கூட, தேவனுடைய வார்த்தை நம் வாழ்வில் நம்பிக்கையையும் நிச்சயத்தையும் தருகிறது. *"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"* என்று வசனம் கூறுகிறது (ரோமர் 8:28). தேவன் நமக்காக வைத்திருக்கும் திட்டங்களையும், மிகுந்த செழிப்புக்கான திட்டங்களையும், நாம் எதிர்பார்க்கும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான திட்டங்களையும் அறிவார் (எரேமியா 29:11). நமது பாதை பிரகாசமாகவும் மேன்மேலும் பிரகாசிக்கும் ஒளியைப் போன்றதாகவும் இருக்கும் (நீதிமொழிகள் 4:18). எனவே, விஷயங்களைப் புரிந்துகொள்வோம் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிகளும் கர்த்தரால் கட்டளையிடப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (சங்கீதம் 37:23,24). இவையும் மற்றும் பல வேத வசனங்களும் நம்மை அஞ்சா நெஞ்சத்தாலும் நம்பிக்கையாலும் நிரப்புகின்றன. நாம் அவருடைய வாக்குத்தத்தங்களில் தொடர்ந்து நிலைத்திருக்கிறோம்.

இதேபோல், நம் வாழ்வின் பல்வேறு பகுதிகளுக்கு,

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும் கட்டளைகளையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். நம் வாழ்வின் அனைத்து பகுதிகளையும் பற்றிய அவருடைய வார்த்தை தூய்மையானது மற்றும் வல்லமை நிறைந்தது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

வார்த்தையில் உள்ள வரம்பற்ற வல்லமையையும், அது நம் வாழ்வில் வெளிப்படுவதற்கான சாத்தியத்தையும் புரிந்துகொண்ட பிறகு, நம் வாழ்வில் தேவனுடைய வார்த்தையின் வல்லமையை அனுபவிக்க நாம் என்ன செய்ய வேண்டும்? ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையின் உள்ளார்ந்த வல்லமையை வெளியிடுவது எது? இவற்றை பின்வரும் அத்தியாயங்களில் ஆராய்ந்து பார்ப்போம்.

# 3

# தேவனுடைய வார்த்தை: அற்புதமான விதை

கர்த்தராகிய இயேசு பெரும்பாலும் உவமைகளைப் பயன்படுத்தி போதித்தார். உவமைகள் என்பது தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய உண்மையைப் புரிந்துகொள்ள நமது உலகத்தின் உதாரணங்களிலிருந்து சொல்ல உதவும் கதைகள் அல்லது எடுத்துக்காட்டுகளாகும். தேவனுடைய ராஜ்யம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை உவமைகள் நமக்குக் கற்பிக்கின்றன.

நம்மில் பலருக்கு நன்கு தெரிந்த உவமைகளில் ஒன்று, மூன்று சுவிசேஷங்களில் நமக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள விதைப்பவரின் உவமையாகும் (மத்தேயு 13:1-9,18-23; மாற்கு 4:1-10,13-20; லூக்கா 8:4-15). இந்த உவமையை விளக்கும் மாற்குவின் பதிவைப் படித்து, மூன்று சுவிசேஷங்களிலும் உள்ள உரையிலிருந்து ஆழமான புரிதலைப் பெறுவோம்.

## விதைப்பவரின் உவமை

**மாற்கு 4:1-10,13-20;**

**[1]அவர் மறுபடியும் கடலோரத்திலே போதகம்பண்ணத் தொடங்கினார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் கடலிலே நின்ற ஒரு படவில் ஏறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கடற்கரையில் நின்றார்கள்.**

**[2]அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குப் போதித்தார்; போதிக்கிறபொழுது அவர்களுக்குச் சொன்னது:**

**[3]கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.**

**[4]அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.**

**[5]சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது; அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது. [6]வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று.**

**[7]சிலவிதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி, அதை நெருக்கிப்போட்டது.**

**[8]சிலவிதை நல்ல நிலத்தில் விழுந்து, ஓங்கிவளருகிற பயிராகி, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தது.**

**[9]கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று அவர்களுக்குச் சொன்னார்.**

**[10]அவர் தனித்திருக்கிறபோது, பன்னிருவரோடுங்கூட அவரைச் சூழந்திருந்தவர்கள் இந்த உவமையைக் குறித்து அவரிடத்தில் கேட்டார்கள்.**

**[13]பின்பு அவர் அவர்களை நோக்கி: இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?**

**[14]விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.**

**[15]வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்; இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.**

**[16]அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டும்,**

**[17]தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்.**

**[18]வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்.**

**[19]இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்.**

**[20]வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்.**

விதைப்பவரின் உவமை எளிய நடையிலானது, குறிப்பாக வாசிப்பு அல்லது அனுபவம் மூலம், விதைகளை விதைத்து தாவரங்கள் அல்லது பயிர்களை வளர்க்கும்

செயல்முறையைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்கு இது புரிந்துகொள்ள மிகவும் எளிதானது. நம் வாழ்வில் தேவனுடைய வார்த்தையின் செயல்பாடு பற்றிய ஆழமான மற்றும் வல்லமைவாய்ந்த சத்தியங்களை வெளிப்படுத்த கர்த்தர் இந்த எளிய உவமையைப் பயன்படுத்துகிறார். தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளதாகவும், வேகமாக செயல்படத்தக்கதாகவும், தேவனுடைய வல்லமையால் நிறைந்ததாகவும் இருப்பதை நாம் அறிவோம் (எபிரெயர் 4:12). தேவனுடைய வார்த்தையில் உள்ள ஜீவனும் வல்லமையும் நம் வாழ்வில் எவ்வாறு வெளிப்படக் கூடும் என்பதை இந்த உவமை நமக்கு வெளிப்படுத்துகிறது. தேவனுடைய வார்த்தை பலுகிப் பெருகுவதைத் தடுக்கும் விஷயங்களையும் இது வெளிப்படுத்துகிறது.

மற்ற எல்லா உவமைகளையும் புரிந்துகொள்வதற்கு இந்த உவமை முக்கியமானது. இயேசு கூறினார், *"இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?"* (மாற்கு 4:13). இது இரண்டு முக்கியமான விஷயங்களைக் குறிக்கிறது.

- முதலாவதாக, இந்த உவமையிலிருந்து ஆவிக்குரிய சத்தியத்தையும் ஆழமான புரிதல்களையும் எவ்வாறு பெறுவது என்பதைக் கற்றுக்கொண்டால், மற்ற எல்லா உவமைகளிலிருந்தும் அப்படியே கற்றுக்கொள்ள முடியும்.
- இரண்டாவதாக, இந்த உவமையில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள், இயேசுவின் மற்ற எல்லா உவமைகளிலும் அடங்கியுள்ள மற்றும் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களைப் புரிந்துகொண்டு நடக்க நமக்கு உதவும் திறவுகோல்களாகும்.

விதைப்பவரின் உவமையில் நமக்குக் கொடுக்கப்பட்ட

முக்கிய கருத்துக்களை முன்னிலைப்படுத்துவோம். இந்த சுருக்கமான விளக்கத்தை வழங்குவதில், மூன்று நற்செய்திகளில் இதற்கு இணையாக உள்ள பகுதிகளிலிருந்து நாம் வாக்கியங்களைப் பெறுகிறோம்.

1) தேவனுடைய வார்த்தை ஒரு விதையைப் போன்றது. (மாற்கு 4:14)

2) தேவனுடைய வார்த்தையாகிய விதை விதைக்கப்பட வேண்டிய நிலம் நம்முடைய இருதயமே ஆகும். (மாற்கு 4:15)

3) விதை கனி கொடுக்க வேண்டுமென்றால், அதைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் வேண்டும்.

4) சாத்தான் வார்த்தையைத் திருடுவதைத் தடுக்க, நாம் வார்த்தையைப் புரிந்துகொள்ள வேண்டும் (ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்). (மத்தேயு 13:19)

5) உலகத்தாலோ அல்லது பிசாசாலோ நாம் என்ன கஷ்டங்களை அல்லது துன்புறுத்தல்களை சந்தித்தாலும், நாம் வார்த்தையைப் பற்றிக்கொண்டு, அது நம் இருதயங்களில் வேரூன்ற அனுமதிக்க வேண்டும், அப்போது அது கனிகளைக் கொடுக்கும். (மாற்கு 4:16,17)

6) வார்த்தையை நெருக்கக்கூடிய விஷயங்களான இவ்வுலகக் கவலைகள், வஞ்சகம் போன்றவற்றிலிருந்தும், ஐசுவரியம், பிற பொருட்களின் மீதான ஆசை மற்றும் வாழ்க்கையின் இன்பங்களிலிருந்தும் நம் இருதயங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். (மாற்கு 4:19)

7) நாம் வார்த்தையைப் புரிந்துகொண்டு (மத்தேயு 13:23), அதை ஏற்றுக்கொண்டு (மாற்கு 4:20) நம் இருதயங்களில் தக்கவைத்துக்கொள்ளும்போது (லூக்கா 8:15), நம்

வாழ்வில் கனி கொடுப்போம்.

தேவனுடைய வார்த்தையை தியானிப்பதன் மூலம் தேவனுடைய வார்த்தையாகிய விதையை நம் இதயங்களில் விதைப்பதில் உள்ள செயல்முறைக்கு சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம், இந்த முக்கிய ஆழமான புரிதல்கள் ஒவ்வொன்றையும் நாம் விரிவாகப் பார்ப்போம்.

# 4
# விதை என்பது தேவனுடைய வார்த்தை

**லூக்கா 8:11**
**அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்.**

**1 பேதுரு 1:23**
**அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.**

இந்த உவமையில் நாம் காணும் முதல் உண்மை என்னவென்றால், தேவனுடைய வார்த்தை ஒரு விதை போன்றது. நீங்கள் ஒரு விதையை உங்கள் கையில் வைத்திருக்கும்போது, அது மிகவும் அற்பமாகவும் உயிரற்றதாகவும் தோன்றுகிறது. ஒரு சிறிய விதை கூட, தரையில் விதைக்கப்படும்போது, அது முளைத்து, வேர் பற்றி, இறுதியில், ஒரு செடியாகவோ அல்லது ஒரு பெரிய மரமாகவோ வளர்வதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிவதில்லை. விதையானது ஒரு புதிய செடியையோ அல்லது மரத்தையோ உருவாக்கும் திறனைப் பெற்றுள்ளது. ஒரு விதத்தில், ஒரு விதையில் படைப்புத் திறன் உள்ளது, ஏனெனில் அது முன்பு இல்லாத ஒன்றை உருவாக்குகிறது. மேலும், விதை தனியாக இருந்தால், ஒரு விதைப் பையில் அல்லது சேமிப்பு கிடங்கில் இருந்தால், அது அதன் திறனை வெளியிட முடியாது. விதையில் உள்ள வல்லமை, அது விதைக்கப்பட்டு முறையாக வளர்க்கப்படும்போது மட்டுமே வெளியிடப்படுகிறது.

தேவன் நம்மிடம் பேசிய ஒவ்வொரு வார்த்தையும்

ஒரு விதையாகும். வேதாகமம் ஒரு விதைப் பை அல்லது விதைகளால் நிறைந்த ஒரு சேமிப்பு கிடங்கு. தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் அல்லது வாக்குத்தத்தத்தையும் ஒரு அற்புத விதை என்று நாம் குறிப்பிடலாம். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற இந்த விதைகளில் சிருஷ்டிப்பு வல்லமை உள்ளது. தேவனுடைய வார்த்தையின் இந்த விதைகள் நம் இதயங்களில் விதைக்கப்பட்டு வளர்க்கப்படும்போது, அவைகளில் உள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அவை நம் வாழ்வில் வெளியிடும்.

1 பேதுரு 1:23-ல், தேவனுடைய வார்த்தை *"அழியாத விதை"* என்று குறிப்பிடபயன்படுத்தப்பட்டகிரேக்கவார்த்தை *'ஸ்போரா'* என்பதாகும். தேவனுடைய வார்த்தையே அதிசய *'ஸ்போரா'*—அற்புத விதை. அடிப்படைக் கொள்கை இதுதான் — தேவனுடைய வார்த்தைக்கு உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. அதற்குள் உயிர் கொடுக்கும், சிருஷ்டிக்கும், அற்புதம் செய்யும் வல்லமை உள்ளது. தேவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் சிருஷ்டிக்கும் திறன் கொண்ட ஒரு அற்புத விதையாகும்.

1 பேதுரு 1:23 நாம் தேவனுடைய வார்த்தையினால் மறுபடியும் பிறந்தோம் என்று கூறுகிறது. யாக்கோபு 1:18 நாம் *"சத்திய வார்த்தையால்"* மறுபடியும் பிறந்தோம் என்று மீண்டும் வலியுறுத்துகிறது. தேவனுடைய வார்த்தை எனும் விதை (சுவிசேஷம்) நம் இதயங்களில் விதைக்கப்பட்டு, அதை நாம் விசுவாசித்தபோது, அது அதன் உயிர் கொடுக்கும் வல்லமையை நமக்குள் வெளியிட்டது. ஒரு நொடியில், ஒரு கணத்தில், நாம் மறுபடியும் பிறந்தோம். நாம் புது ஜீவன்களாய் மாறினோம். *"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின"* (2 கொரிந்தியர் 5:17). தேவனுடைய சிருஷ்டிப்பு கிரியை நம் ஆவிகளில் நடந்தது (எபேசியர் 2:10). நம்மில்

நிறைவேற்றப்பட்ட (மற்றும் இரட்சிக்கப்படுபவர்களின் இதயங்களில் நிறைவேற்றப்பட்டு வரும்) இந்த சிருஷ்டிப்பின் பணி, நாம் அனுபவிக்கும் மிகப்பெரிய அதிசயம். இது கிறிஸ்துவில் ஒரு புதிய சிருஷ்டியாக மாறுவதற்கான புதிய பிறப்பின் அதிசயம். மேலும் இந்த சிருஷ்டிப்பின் அதிசயம் அழியாத விதையின் (சுவிசேஷத்தின்) வல்லமையால், அதாவது தேவனுடைய வார்த்தையால் ஏற்பட்டது.

கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக உருவாவதற்கு இது எவ்வளவு மகத்தான பணி என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சாத்தானின் வல்லமை நம் வாழ்க்கையிலிருந்து துண்டிக்கப்பட்டது. சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து தேவனுடைய சொந்த குமாரனின் ராஜ்யத்திற்குள் கொண்டுவரப்பட்டோம் (கொலோசெயர் 1:13). தேவனுடைய குடும்பத்தில் ஒரு நபராகத் தத்தெடுக்கப்பட்டோம். தேவனிடமிருந்து பிறந்து தெய்வீக சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக்கப்பட்டோம். கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்பட்டோம், கிறிஸ்துவுக்குள் இருப்பதன் அற்புதமான ஆசீர்வாதங்கள் அனைத்தும் நம்முடையதாகிவிட்டன. தேவனுடைய வார்த்தையாகிய விதை அதன் அற்புத வல்லமையை நம் வாழ்வில் வெளியிட்ட ஒரு நொடியில் இவை அனைத்தும், இன்னும் அநேக ஆசீர்வாதங்களும் நம்முடையதாகிவிட்டன.

தேவனுடைய வார்த்தையாகிய விதை நம்மில் கிரியை செய்யும் வல்லமையையோ அல்லது திறனையோ இழந்துவிட்டதா? வார்த்தையின் அற்புத விதைகளால் நம் வாழ்வில் இனி எந்த அற்புதங்களையும் ஏற்படுத்த முடியாதா? இல்லை, ஒருபோதும் அப்படி இல்லை! ஏனென்றால் வார்த்தையானது அழியாத விதையாக இருக்கிறது. வார்த்தை ஜீவிக்கிறது, நிலைத்திருக்கிறது, என்றென்றும் நிலைத்திருக்கிறது. தேவன் நம்மிடம் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் நம் வாழ்வில் உற்பத்தி செய்யும்

ஆற்றலைக் கொண்டுள்ளது.

## தேவனுடைய வார்த்தை உற்பத்தி செய்யக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

**ஏசாயா 55:10,11**

**10 மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி,**
**அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை**
**கிளம்பி விளையும்படிச்செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும்**
**புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,**
**11 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்;**
**அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான்**
**விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி**
**வாய்க்கும்.**

தம்முடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தை வெறுமையாகத் தம்மிடத்திற்குத் திரும்பாது; மாறாக, அது தாம் விரும்புவதையும் தமது நோக்கங்களையும் நிறைவேற்றும் என்று தேவன் சொன்னார்.

ஏசாயா 55:10,11 ஆகிய வசனங்களிலிருந்து நாம் பெறும் நான்கு எளிய ஆழமான விளக்கங்கள் உள்ளன.

1) தேவனுடைய வார்த்தை உற்பத்தி செய்வதற்காக (அல்லது நிறைவேற்றுவதற்காக) வடிவமைக்கப்பட்டுள்ளது.

2) தேவனுடைய வார்த்தை, தேவன் விரும்புவதையும் அவரது நோக்கத்தையும் நிறைவேற்றும்.

3) தேவன் தமது நோக்கத்தையும் மகிழ்ச்சியையும் நிறைவேற்ற விரும்பும்போது, அவர் தமது வார்த்தையைப் பேசுகிறார்.

4) தேவனுடைய வார்த்தையானது தேவனுடைய நோக்கத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறது.

தேவன் பேசும் வார்த்தைகள் (மற்றும் அவர்

பேசிய வார்த்தைகள்) வெற்று வார்த்தைகள் அல்ல. அவை தேவனுடைய சர்வவல்லமையால் நிறைந்த வார்த்தைகள். அவை உற்பத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு விதையைப் போலவே, தேவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அதன் நிறைவேற்றத்தைக் கொண்டுவரும் வகையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறனால் நிரம்பியுள்ளது.

தேவன் தமது வார்த்தையை வடிவமைத்து, தாம் விரும்பியதையும், பூமியில் அவர் செய்ய விரும்பியதையும் உருவாக்கினார். தேவன் தம் மக்களை ஆசீர்வதிக்க நோக்கமாயிருப்பதால் (சங்கீதம் 3:8), அவருடைய வார்த்தை அதையே நிறைவேற்றும். தேவன் மக்களைக் குணப்படுத்த சித்தமாயிருக்கிறார் (யாத்திராகமம் 15:26; யாத்திராகமம் 23:25). ஆகையால், அவருடைய வார்த்தை வியாதியஸ்தர்களுக்கு சுகத்தைக் கொண்டுவரும் (சங்கீதம் 107:20). அவரது ஜனங்கள் தங்கள் வாழ்க்கைக்கு ஞானம், புரிதல் மற்றும் வழிகாட்டுதலைப் பெற வேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டுள்ளார் (ஏசாயா 48:17; சங்கீதம் 32:8), எனவே, அவருடைய வார்த்தை அவருடைய இந்த சித்தத்தை நிறைவேற்றும். அவர் நோக்கமாகக் கொண்டிருக்கிற, திட்டமிட்டிருக்கிற, சித்தமாயிருக்கிற மற்றும் விரும்பிய அனைத்தையும் அவருடைய வார்த்தை நிறைவேற்றும்.

கர்த்தராகிய தேவன் பரலோகத்தில் இருக்கிறார். பூமியில் தம்முடைய நோக்கத்தையும் மகிழ்ச்சியையும் நிறைவேற்ற அவர் விரும்பும்போது, அவர் தம்முடைய வார்த்தையை வெளியிடுகிறார். இந்த வார்த்தை ஒரு அற்புத விதை. அது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும். நாம், அவருடைய ஜனங்களாக இங்கே பூமியில் இருக்கிறோம். அவருடைய அழியாத வார்த்தையின் வல்லமையினாலும், அவருடைய ஆவியின் கிரியையின் மூலமும், தேவன்

தாம் விரும்பியதையும், நம் வாழ்வில் நோக்கங்களையும் நிறைவேற்றுகிறார்.

## விசுவாசிக்கிற உங்களுக்குள் வார்த்தை பலமாய் செயல்படுகிறது

**1 தெசலோனிக்கேயர் 2:13**

**ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது,அதைமனுஷர்வசனமாகஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.**

மனித வாழ்க்கைக்கு தமது வல்லமையை சுமந்து செல்லும் ஒரு கருவியாக தேவன் தம்முடைய வார்த்தையை வடிவமைத்துள்ளார். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய கடிதத்தில், தேவனுடைய வார்த்தை அதன் தெய்வீக வல்லமையை வெளியிடுகிறது மற்றும் அதை விசுவாசிப்பவர்களின் வாழ்க்கையில் பெலன் செய்கிறது என்பதை விளக்குகிறார். *“பெலன் செய்கிறது”* என்பதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை *“எனர்ஜியோ’* என்பதாகும், அது தெய்வீக ஆற்றல் அல்லது உள்ளிருந்து வெளிப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைக் குறிக்கிறது, அது பலமாக செயல்படுவதாய் இருக்கிறது. ஆம்ப்ளிஃபைடு ஆங்கில வேதாகமத்தில் இந்த அடைப்புக்குறிப்பு உள்ளது, *“[விசுவாசம் உள்ளவர்களிடம் அதன் உள்ளார்ந்த, இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைப் பயன்படுத்துதல்].”* நாம் அதைப் பெற்றுக்கொண்ட பின் விசுவாசிக்கும்போது, தேவனுடைய வார்த்தையானது தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை நம் வாழ்வில் வெளியிடுகிறது.

வேதவாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு தேவனுடைய வார்த்தையும் ஒரு அதிசய விதையாகும், இது ஒவ்வொரு

விசுவாசியின் வாழ்க்கையிலும் தேவனுடைய காரியங்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. ஒவ்வொரு விதையும் தன் தன் சொந்த வகையின்படி உற்பத்தி செய்வதால் (ஆதியாகமம் 1:11,12), தேவனிடமிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் அது எதை உற்பத்தி செய்ய வடிவமைக்கப்பட்டதோ, அதையே உற்பத்தி செய்யும். சுகமளித்தல் பற்றிய தேவனுடைய வார்த்தை சுகமளித்தலை உருவாக்கும். ஆசீர்வாதம் மற்றும் செழிப்பு பற்றிய தேவனுடைய வார்த்தை ஆசீர்வாதத்தையும் செழிப்பையும் உருவாக்கும். வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பற்றிய தேவனுடைய வார்த்தை நம் வாழ்க்கையின் அந்தப் பகுதியிலேயே வேண்டியவற்றை உற்பத்தி செய்யும்.

வார்த்தையாகியவிதையைப்பற்றியஇந்தஉண்மையைக் கூறும்போது, வேதத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் உள்ள வசனங்களுக்குக் கீழ்ப்படிவது மட்டும் அல்லாமல், தேவனுடைய வார்த்தையை முழுவதுமாகக் கேட்டு கீழ்ப்படிய வேண்டும் என்ற கொள்கையும் உள்ளது என்பதை நாங்கள் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். தேவனுடைய முழு ஆலோசனையையும் கேட்டு கீழ்ப்படிபவர்களுக்கு ஜீவன், ஆரோக்கியம், ஆசீர்வாதம் மற்றும் பரிபூரண நல்வாழ்வு ஆகியவை வாக்களிக்கப்படுகின்றன (நீதிமொழிகள் 3:1,2,7,8; நீதிமொழிகள் 4:20-22).

# 5
# விதையானது இதயத்திற்குள் விதைக்கப்பட வேண்டும்

## இதயத்தின் மண்

**மாற்கு 4:14,15;**

**[14] விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.**

**[15] வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்; இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.**

விதைப்பவரின் உவமையின் மூன்று சுவிசேஷ பதிவுகளிலும், வார்த்தையாகிய விதை இருதயத்தில் விதைக்கப்பட்டது என்பதை அவை தெளிவாகக் கூறுகின்றன (மத்தேயு 13:19; மாற்கு 4:15; லூக்கா 8:12). இருதயம் என்பது தேவனுடைய வார்த்தையாகிய விதை விதைக்கப்பட வேண்டிய நிலமாகும்.

வைன் என்பவருடைய முழுமையான புதிய ஏற்பாட்டு வார்த்தை விளக்க அகராதியின்படி, "இதயம்" என்பது ஒழுக்க சுபாவம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையின் இருக்கை, துக்கம், ஆசைகள், பாசங்கள், உணர்வுகள், எண்ணங்கள், புரிதல், பகுத்தறிவு வல்லமைகள், கற்பனை, நோக்கங்கள், சித்தம், விருப்பம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் இருக்கையைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் அது ஒரு தனிநபரின் உள்ளான ஒழுக்க நபரைக் குறிக்கும் இதயத்தைக் குறிக்கும், அது உணர்ச்சிகள், பகுத்தறிவு மற்றும் சித்தத்தை உள்ளடக்கியது. புதிய ஏற்பாடு ஆவிக்கும் (*'நியூமா'*) ஆத்துமாவுக்கும் (*'சைக்கி'*) இடையில் வேறுபடுகிறது மற்றும் "இருதயம்" என்ற வார்த்தை பெரும்பாலும் ஆவி மற்றும்

ஆத்துமா இரண்டையும் உள்ளடக்கிய ஒரு பொதுவான அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது (எபிரெயர் 4:12). இதயம் என்பது உள் நபரை, மறைவான மனிதனை (1 பேதுரு 3:4) அல்லது உண்மையான மனிதனைக் குறிக்கிறது. எனவே, வார்த்தை இருதயத்தில் விதைக்கப்படுகிறது என்றால், வார்த்தையானது உள்ளான மனிதனில், தனிநபரின் ஆவி மற்றும் ஆத்துமாவில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே அதன் பொருளாகும், அதாவது ஒரு நபரின் உள்ளத்தின் ஆழத்தில் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வார்த்தையை நமது விசுவாசம், நம்பிக்கை, விருப்பங்கள், ஆசைகள், உணர்வுகள், எண்ணங்கள், புரிதல், பகுத்தறிவு, கற்பனை, நோக்கங்கள், திட்டங்கள் மற்றும் சித்தத்தின் எல்லைக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## நாட்டப்பட்ட வார்த்தை

**யாக்கோபு 1:21**

**ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.**

*"நாட்டப்பட்ட"* வார்த்தை என்பது ஒரு விதையானது தனக்குள்ளே வேர்விட்டு, உள்வளர்ந்து, புதிதாய் துளிர்விட்டு, நிலத்திற்குள் வேரூன்றி இருப்பதைப் பற்றிய கருத்தை உடையதாய் இருக்கிறது. நிலத்திற்குள் உள்ள விதையைப் போலவே, வார்த்தையும் இதயத்தில் செயல்படுகிறது. அது இதயத்தின் மண்ணுக்குள் சென்று, வேர்விட்டு, பின்னர் ஆத்துமாவில் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. இது, வார்த்தை உள்ளான மனிதனுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உள்ளே விதைக்கப்பட்டு ஆழமாக வேரூன்றப்படுவதற்கான செயல்முறையின் வழியாக செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறது.

## உங்கள் இதயத்திற்குள்

**நீதிமொழிகள் 4:20-23**

**[20] என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.**

**[21] அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.**

**[22] அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.**

**[23] எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.**

தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களில் ஏற்றுக்கொள்வது என்பது வெறும் புதிய ஏற்பாட்டு வெளிப்பாடு மட்டுமல்ல. பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய ஜனங்களை தங்கள் இருதயங்களில் தம்முடைய வார்த்தையை வைத்துக்கொள்ளும்படி கட்டளையிட்ட சந்தர்ப்பங்களை நாம் காண்கிறோம். *"இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது"* (உபாகமம் 6:6; உபாகமம் 11:18ஐயும் காண்க). சங்கீதக்காரன் இவ்வாறு கூறினான், *"...உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்"* (சங்கீதம் 119:11).

நீதிமொழிகள் 4:20-23-ல் உள்ள பகுதி, தேவனுடைய வார்த்தைக்கு நம் இருதயங்களில் சரியான இடத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்கான ஒரு வல்லமைவாய்ந்த அழைப்பாகும்.

***என் வார்த்தைகளைக் கவனி***— நம் கவனத்தை ஈர்க்கும் எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் மனப்பூர்வமாக தேவனுடைய வார்த்தைக்கு கவனமாகச் செவிகொடுப்பதைத் தேர்வு செய்கிறோம். ஒவ்வொரு சூழ்நிலையிலும், தேவனுடைய வார்த்தை இந்த விஷயத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்பதைக் கவனிப்பதிலிருந்து தொடங்கத்

தேர்வு செய்கிறோம். நாம் தேவனுடைய வார்த்தையை முதன்மையாகக் கருதுகிறோம். இதுவே தேவனுடைய வார்த்தைக்குக் கவனம் செலுத்துவதாகும்.

***என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்*** —நாம் தேவன் பக்கமாக சாய்ந்து அவர் சொல்வதைக் கேட்கிறோம், அதே நேரத்தில் ஏராளமான பிற குரல்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. நாம் தேவனுடைய வார்த்தைக்கு இசைவாக இருந்து கவனத்தை சிதறடிக்கும் குரல்களைத் துண்டிக்கிறோம்.

***அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக.***— நமது நிலையான பார்வையை நாம் தேவனுடைய வார்த்தையின் மீது செலுத்துகிறோம். நமது மனக்கண்களில் தேவனுடைய வார்த்தையின் படங்களை வரைகிறோம். நாம் வார்த்தையை ‘பார்க்கிறோம்’. தேவனுடைய வார்த்தை நமது கற்பனையை நிரப்ப அனுமதிக்கிறோம்.

***அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்***— இறுதியில் நமது இருதயங்களில் தேவனுடைய வார்த்தையை தாராளமாக பெற்று, வைத்து வைப்பதே குறிக்கோளாக இருக்க வேண்டும், நமது உள்ளார்ந்த நபரை நிரப்பி, நமது எண்ணங்கள், நோக்கங்கள், ஆர்வங்கள் மற்றும் பகுத்தறிவு அனைத்தையும் ஊடுருவிச் செல்வதே இதன் குறிக்கோளாகும். இதன் விளைவாக, வார்த்தையின் மூலம் நமக்கு ஜீவன் மற்றும் ஆரோக்கியம் வழங்கப்படும்.

அவருடைய வார்த்தையால் நம் இருதயங்கள் நிரப்பப்பட்டிருப்பது மிகவும் முக்கியம், ஏனென்றால் நம் வாழ்வில் நடக்கும் விஷயங்களுக்கு இதயமே ஆதாரமாகிய, ஊற்றாக இருக்கிறது. வார்த்தை நம் இருதயங்களை நிரப்பினால், வார்த்தை அதன் ஜீவனையும் வல்லமையையும் நம் வாழ்வில் வெளியிடுகிறது. இவ்வாறு, நம் வாழ்க்கை

தேவனுடைய வார்த்தையின் வல்லமையால் தொடப்பட்டு, உருவாக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டதாகிறது.

## வார்த்தை உங்களுக்கு அருகில் உள்ளது

**உபாகமம் 30:11-14**

**11 நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல.**
**12 நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல;**
**13 நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக்கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல;**
**14 நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது.**

நாம் அவருடைய வார்த்தையை நம் இருதயங்களில் வைத்து வைக்க முயற்சித்திருந்தால், அந்த வார்த்தை எப்போதும் நமக்கு *“மிக அருகில்”* இருக்கும். இருதயம் என்பது தேவனுடைய வார்த்தையை வைத்து வைக்கக்கூடிய ஒரு பெரிய களஞ்சியத்தைப் போன்றது. நம் இருதயத்தை எது நிரப்புகிறதோ, அதுவே நம் வாயிலிருந்து வெளிவருகிறது. வார்த்தை நம் இருதயத்தையும் வாயையும் நிரப்பும்போது, நாம் ஒருபோதும் நம்பிக்கையின்மை மற்றும் விரக்தியைப் பற்றிப் பேச மாட்டோம். தேவனும் அவருடைய வார்த்தையும் தொலைவில், பரலோகத்தில் அல்லது கடல்களுக்கு அப்பால் இருப்பதுபோல் தோன்றினாலும், நம் பேச்சு நம்பிக்கையின்மையைத் தெரிவிக்காது. வார்த்தை நம் இருதயங்களையும் வாய்களையும் நிரப்பும்போது, நாம் அதன்படி வாழ்வோம், அதைச் செய்வோம். மிகவும் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 10:6-8-ல் உபாகமம் 30:11-14-ல் இருந்து இந்தப் பகுதியை மேற்கோள் காட்டி, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளான நமக்கு இதைத்

தெரிவிக்கிறார். எனவே, தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களிலும் வாயிலும் வைத்திருப்பதன் அடிப்படை உண்மையானது, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளான நாமும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாக உள்ளது.

## தியானித்தல் மூலம்

அப்படியானால், தேவனுடைய வார்த்தையாகிய விதையை நம் இருதயங்களில் எவ்வாறு மிகுதியாகப் பெறுவது என்பதுதான் மிகப்பெரிய கேள்வி? விதைப்பவரின் உவமையில், விதைப்பவர் விதையை விதைத்தல் என்பது வார்த்தையைக் கேட்பதற்குச் சமமாகும். விதைக்கப்படும் விதை முளைத்தெழும்புவதற்குக் கூடுதலாக, அது தரைக்குள் நுழைந்து முளைக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். அதேபோல், வார்த்தை நம் இருதயங்களில் பதிக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் அறிகிறோம். இதை எவ்வாறு சாத்தியமாக்குவது?

விதைப்பவரின் உவமையில் இது கூறப்படவில்லை என்றாலும், வேதவசனங்களின் போதனைகளில் நாம் தொடர்ந்து நிலைத்திருந்தால், தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதன் மூலம் இது சாத்தியமாகும் என்பதை நாம் காணலாம்.

தேவனுடைய வார்த்தையைத் தியானித்தல் என்பது நம் இருதயங்களில் வார்த்தைகளை மிகுதியாக சேமித்து வைக்கும் செயல்முறையாகும். நாம் வார்த்தையைக் கேட்கிறோம் மற்றும் ஏற்றுக்கொள்கிறோம், இதனால் வார்த்தை நமக்குள் பதிந்து, வளர்க்கப்பட்டு, நம் வாழ்வில் பலனைத் தரும்.

நம்மை நாமே ஒழுங்குபடுத்திக் கொண்டு, நாம் அவருடைய வார்த்தையை நம் இருதயங்களில் பதித்து வைக்கும்போது, அவருடைய வார்த்தையை எங்கும்,

எந்த நேரத்திலும் எளிதில் அடைய முடியும். நம் இருதயங்களில் பதிந்துள்ள வார்த்தையிலிருந்து நம் வாய்க்கு வார்த்தைகளைக் கொண்டுவர முடியும். நாம் அதற்குள் வைத்ததை வெளிப்படுத்தும்படி பேசுகிறோம். வார்த்தை நம் வாய்களையும் நம் இருதயங்களையும் ஆக்கிரமிக்கும்போது, அது நமக்கு மிக அருகில் வருகிறது. மேலும் சுழற்சி முறையில், இது கிட்டத்தட்ட எங்கும் எந்த நேரத்திலும் தேவனுடைய வார்த்தையைத் தியானிக்க நமக்கு உதவுகிறது. நிச்சயமாகவே, நாம் அமைதியான இடத்தை விரும்புவோம், தொந்தரவுகள் இல்லாமல், வேதாகமத்தை நம் முன் திறந்து வைத்து நம்மால் தியானிக்க முடியும். இருப்பினும், நாம் அவருடைய வார்த்தையை நம் இருதயங்களில் வைத்திருந்தால், பரபரப்பான தெருவில் நடந்து செல்லும்போது அல்லது நெடுஞ்சாலையில் வாகனம் ஓட்டும்போது கூட, எவ்விடத்திலும் வார்த்தையைத் தியானிக்க முடியும்.

அடுத்த அத்தியாயத்தில், தேவனுடைய வார்த்தையைத் தியானிக்கும் வேதாகம செயல்முறையை ஆழமாக ஆராய்ந்து பார்ப்போம்.

# 6

# தேவனுடைய வார்த்தையைத் தியானித்தல்

முந்தைய அத்தியாயங்களில், தேவனுடைய வார்த்தையே நமது விசுவாசத்திற்கான மூல ஆதாரமாகவும் அடித்தளமாகவும் இருக்கிறது என்பதை வலியுறுத்தியுள்ளோம். தேவனுடைய வார்த்தையின் தூய்மையையும் வல்லமையையும் நாம் ஆராய்ந்தோம். தேவனுடைய வார்த்தை தேவனுடைய வல்லமையால் நிறைந்துள்ளது என்பதையும், இந்த வல்லமையை நம் வாழ்வில் வெளியிட முடியும் என்பதையும் நாம் முன்வைத்தோம். தேவனுடைய வார்த்தை ஒரு விதை போன்றது, அது நம் இதயங்களில் விதைக்கப்பட்டு வளர்க்கப்படும்போது, அதன் உருமாற்றத்தக்க வல்லமையை அது நம் வாழ்வில் வெளியிடும் என்பதையும் நாம் புரிந்துகொண்டோம். தேவனுடைய வார்த்தையை தியானிக்கும் ஒழுக்கத்தை ஆராய இப்போது ஒரு படி மேலே செல்கிறோம். வேததியானம் என்பது நம் இதயங்களில் தேவனுடைய வார்த்தையின் விதையை விதைத்து வளர்க்கும் செயல்முறையாகும்.

பொதுவாக, “வேததியானம்” என்ற வார்த்தையை நாம் குறிப்பிடும்போது, மக்கள் பொதுவாக துறவிகளுக்கான சில மாய பயிற்சிகளைப் பற்றி சிந்திக்கிறார்கள். ஒருவேளை, இதனால்தான் திருச்சபை பொதுவாக வேததியானப் பயிற்சியை வலியுறுத்துவதில்லை. உலகெங்கிலும் உள்ள பல கலாச்சாரங்கள் தியானிக்கும் செயல்முறைக்கு அவற்றின் சொந்த மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன என்பது உண்மைதான் என்றாலும், வேததியானத்திற்கு வேதத்தின் அடிப்படையிலான ஒரு அணுகுமுறையை முன்வைப்பதே

எங்களது குறிக்கோளாகும். விசுவாசிகளாக, நாம் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, நமது விசுவாசப் பாதையில் இந்த ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## வேததியானம்—வேதத்தின் அடிப்படையிலான ஒரு ஒழுங்கு

**ஆதியாகமம் 24:63a**

**ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து; ...**

வேதாகமத்தில் “வேத தியானம் செய்தல்” என்ற வார்த்தையின் முதல் குறிப்பு ஆதியாகம புத்தகத்தில் ஈசாக்குடன் தொடர்புடையது. அவர் எப்படி அல்லது எதில் தியானம் செய்கிறார் என்பது குறித்து அதிக தகவல் இல்லாதபோதும், ஆரம்ப காலங்களில் வேதவசனங்களில் தியானப் பயிற்சி செய்யப்பட்டதைக் குறிப்பிடுவது சுவாரஸ்யமானது. மேலும், ஈசாக்கு தியானம் செய்ய வயலுக்குச் சென்றார், இது பொதுவாக தியானத்திற்கு சரியான சூழ்நிலையை உருவாக்கும்படி, அனைத்து கவனச்சிதறல்களையும் குறுக்கீடுகளையும் துண்டிக்க விரும்புவதை நமக்குச் சொல்கிறது.

**யோசுவா 1:8**

**இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.**

தியானம் பற்றி நமக்கு நன்கு தெரிந்த வசனம் யோசுவா 1:8. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரனாகிய மோசே மூலம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். தேவனுடைய நியாயப்பிரமாணங்கள் அவர்களுக்குக்

கொடுக்கப்பட்டிருப்பது எவ்வளவு பாக்கியம் என்பதை மோசே இஸ்ரவேலர்களின் மனதில் பதிய வைத்திருந்தார். உதாரணமாக, மோசே இஸ்ரவேலருக்குப் பேசிய இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்.

**உபாகமம் 4:5-8**

**5 நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன்.**

**6 ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்.**

**7 நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?**

**8 இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?**

இதோடு கூட, தம்முடைய வார்த்தையை தங்கள் இருதயங்களில் வைத்து, அதற்குத் தொடர்ந்து கீழ்ப்படிய வேண்டும் என்று தாம் விரும்புவதாகக் கர்த்தர் தம் ஜனங்களுக்குத் தொடர்ந்து நினைவூட்டினார். *“இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது”* (உபாகமம் 6:6) மற்றும் *“நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, ...”* (உபாகமம் 11:19) என்பன போன்ற கூற்றுகளை நாம் மீண்டும் மீண்டும் வாசிக்கிறோம். இஸ்ரவேலின் தலைமைப் பொறுப்பில் இருந்த யோசுவாவுக்கும் அதே கட்டளை மீண்டும் மீண்டும் கொடுக்கப்பட்டது. கர்த்தர் யோசுவாவை பலங்கொள்ளவும், மிகவும் திடமனதாய் இருக்கவும், மோசேயின் மூலம்

கொடுக்கப்பட்ட முழு நியாயப்பிரமாணத்தையும் கவனமாகக் கடைப்பிடிக்கவும் கட்டளையிட்டார் (யோசுவா 1:7). பின்னர் அதை அவனது இருதயத்திற்குள் கொண்டு வந்து அவற்றை கவனமாகக் கடைப்பிடிக்கும்படி கர்த்தர் யோசுவாவுக்கு ஒரு ஒழுங்குமுறையை வழங்கினார். கர்த்தர் யோசுவாவிடம், *"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்..."* (யோசுவா 1:8a) என்று கூறினார்.

யோசுவாவுக்கு இரவும் பகலும் தம்முடைய வார்த்தையைத் தியானிக்கும்படி கட்டளையிட்டவர் தேவன்தான் என்பது கவனிக்க வேண்டிய ஒரு விஷயம். எனவே, வார்த்தையைத் தியானிப்பது என்பது தேவனால் கற்பிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படும் ஒரு ஒழுங்குமுறையாகும். இது நாம் பயிற்சி செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பும் ஒரு ஒழுங்குமுறையாகும்.

செயல்முறையைக் கவனியுங்கள்...

1) நியாயப்பிரமாண புத்தகத்தின் வார்த்தைகள் அவனுடைய பேச்சின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். (*"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக"*)

2) அவன் தொடர்ந்து வார்த்தையைத் தியானிக்க வேண்டியிருந்தது. (*"இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக"*)

வேததியானம் என்பது வேதத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு ஒழுங்குமுறை, இது தேவனுடைய

வார்த்தையை நம் இருதயங்களிலும் (ஆவி) ஆத்துமாக்களிலும் (மனதிலும்) சேமித்து வைக்க உதவுகிறது. வேததியானத்தைப் பற்றிய ஏராளமான குறிப்புகள் உள்ளன, குறிப்பாக சங்கீதங்களில் அவை உள்ளன. சங்கீதம் 1 என்பது நீதிமான்களின் ஒழுக்கத்தைப் பற்றி நமக்குக் கற்பிக்கும் நன்கு அறியப்பட்ட வேதத்தின் ஒரு பகுதியாகும். அப்படிப்பட்ட மனிதன் தேவபக்தியற்ற ஆலோசனையின்படி நடக்கமாட்டான், பாவிகளின் வழிகளைப் பின்பற்றமாட்டான், பரியாசக்காரர்களின் செயல்களில் பங்குபெறமாட்டான் என்று அது நமக்குச் சொல்கிறது. *"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்"* (சங்கீதம் 1:2). நீதியில் நடக்கும்படி அவனது ஒழுக்கமும், வார்த்தையின் மீதான தொடர்ச்சியான தியானமும், அவன் செய்யும் எல்லாவற்றிலும் கனி கொடுக்கவும், பலனளிக்கவும், செழிக்கவும் உதவுகிறது (சங்கீதம் 1:3).

வேத தியானம் என்பது தேவனுடைய வார்த்தையை தியானிப்பதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. நாம் தியானிக்கக்கூடிய பிற தலைப்புகள் அல்லது கருப்பொருள்களைக் காணலாம். உதாரணமாக, நாம் கர்த்தரையே தியானிக்கலாம். கர்த்தர், அவரது குணாதிசயம் மற்றும் அவரது பண்புகள் ஆகிய அனைத்தும் நமது தியானத்தின் மையமாகின்றன. இஸ்ரவேலின் இனிமையான சங்கீதக்காரரான தாவீது, *"என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்"* (சங்கீதம் 63:6) என்று கூறினார். மற்றொரு இடத்தில் சங்கீதக்காரர், *"நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்; நான் கர்த்தருக்குள் மகிழுவேன்"* (சங்கீதம் 104:34) என்று எழுதினார்.

நம் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதமான

காரியங்களைப் பற்றியும் நாம் தியானிக்கலாம். தாவீது கூறினார், *“பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்; உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்”* (சங்கீதம் 143:5). இஸ்ரவேலின் மற்றொரு சங்கீதக்காரரான ஆசாப் இவ்வாறு எழுதினார், *“உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்”* (சங்கீதம் 77:12). ஞானம் மற்றும் புரிதல் பற்றிய விஷயங்களையும் நாம் சிந்தித்து தியானிக்கலாம். சங்கீதக்காரர் இவ்வாறு எழுதினார், *“ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள். பூமியின் குடிகளே, சிறியோரும் பெரியோரும் ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் ஏகமாய்ச் செவிகொடுங்கள். என் வாய் ஞானத்தைப் பேசும்; என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்”* (சங்கீதம் 49:1-3).

## வேத தியானம்—வேதாகமத்தின் பார்வை

தியானம் என்பது வேதத்தின் அடிப்படையிலான ஒரு பயிற்சி என்பதையும், அது உண்மையில் தேவனாலேயே ஊக்குவிக்கப்படுகிறது என்பதையும் புரிந்துகொண்ட பிறகு, தேவனுடைய வார்த்தையை நம் இதயங்களில் வைத்து வைப்பதற்கான வழிமுறையாக, நமது அடுத்த குறிக்கோள் தியானம் செய்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வதாகும்.

பழைய ஏற்பாட்டில் “தியானம்” என்ற வார்த்தைக்கு இரண்டு முக்கிய எபிரேய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று *‘ஹாகா’* “, அதன் அர்த்தம், சிந்தித்தல், கற்பனை செய்தல், ஆழமாக யோசித்தல், புலம்புதல், உறுமல், முணங்குதல், முணுமுணுத்தல், பெருமூச்சுவிடுதல் போன்ற சத்தம் அதிகமில்லாத ஒலியை எழுப்புதல், ஒருவர் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லும்போது எதையாவது சிந்தித்தல்” என்பதாகும். மற்றொரு எபிரேய சொல் *‘சியாக்’* என்பதாகும். சங்கீதம் 119-ல் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்ட இதன் பொருள், மீண்டும்

ஒருமுறை "சிந்தித்தல், அதாவது, (தன்னுடன் சற்று சத்தமாகப் பேசுதல்) உரையாடுதல், உரைத்தல், தொடர்புகொள்ளுதல், புகார் செய்தல், அறிவித்தல், சிந்தித்தல், ஜெபம் செய்தல், பேசுதல், சொல்லுதல்" என்பதாகும். தி ஸ்பிரிட் ஃபில்டு லைஃப் பைபிளின் முதல் வார்த்தையே பின்வரும் கருத்துக்களைக் கொண்டுள்ளது. அது இவ்வாறு கூறுகிறது, *"ஹாகா என்பது ஆங்கில வார்த்தை குறிப்பிடுகிற "தியானம்" போன்று ஒரு மனப் பயிற்சியாக மட்டும் அல்ல, மாறாக அது வித்தியாசமான ஒன்றைக் குறிக்கிறது. எபிரேய சிந்தனையில், வேதாகமத்தை தியானிப்பது என்பது வெளிப்புற கவனச்சிதறல்களை முற்றிலுமாக கைவிட்டு, மென்மையான, சத்தத்துடன் கூடிய ஒலியில் அமைதியாக அவற்றை மீண்டும் மீண்டும் கூறுவதாகும். இந்த மரபிலிருந்து "டேவுனிங்" என்று அழைக்கப்படும் ஒரு சிறப்பு வகை யூத பிரார்த்தனை வருகிறது, அதாவது, நூல்களை ஓதுதல், தீவிரமான ஜெபங்களை ஜெபித்தல், அல்லது குனிந்தோ அல்லது முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டோ தேவனுடன் தொடர்பு கொள்ளும் செயலில் தன்னை மறத்தல் என்பது அதன் அர்த்தம் ஆகும். தியான-ஜெபத்தின் இந்த மாறும் வடிவம் தாவீதின் காலத்திற்கு முந்தையது என்பது தெளிவாகிறது."* (பக்கங்கள் 753-754, தாமஸ் நெல்சன் பப்ளிஷர்ஸ், 1991).

தியானம் என்பது அடிப்படையில் மனித ஆவியின் ஒரு செயல்பாடாகும், இது ஆத்துமாவை (சிந்தனை, புத்தி, கற்பனை, உணர்வு மற்றும் விருப்பத்தின் இருப்பிடம்) அடைந்து சரீரப்பிரகாரமாக உடலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அறிவுறுத்தும்படியான நோக்கங்களுக்காக, தியானத்தின் செயல்முறையை மூன்று வார்த்தைகளைப் பயன்படுத்தி சுருக்கமாகக் கூற விரும்புகிறோம் — **சிந்தனை செய்தல், காட்சிப்படுத்திப் பார்த்தல்** மற்றும் **அறிக்கையிடுதல்**. எந்த நேரத்திலும், தியானம் செய்யும்போது, ஒருவர் இந்த மூன்று செயல்முறைகளில்

ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் ஈடுபடலாம். ஒருவர் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளைப் பற்றி ஆழ்ந்த சிந்தனையில் இருக்கலாம், அல்லது இரண்டையும் சிந்தித்து குறிப்பிட்ட விஷயத்தை மனக்கண்களால் காணலாம், அல்லது பாவமன்னிப்பு ஜெபத்தில் ஈடுபடலாம்.

இவை ஒவ்வொன்றையும் நாம் விரிவாகப் பார்ப்போம்.

## சிந்தனை – உங்களுக்குள் சிந்தித்தல்

**சங்கீதம் 143:5**

**பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்; உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்.**

தியானத்தின் இந்த அம்சம் நமது சிந்தனையையும் அறிவையும் உள்ளடக்குகிறது. ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி நாம் சிந்தனையில் மூழ்குகிறோம், சிந்திக்கிறோம், ஆழமாக யோசிக்கிறோம். உதாரணமாக, தெய்வீக சுகமளித்தல் என்று சொல்லக்கூடிய வார்த்தையிலிருந்து ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, ஏசாயா 53:4-ஐ வேத வசனமாகத் தேர்ந்தெடுத்திருந்தால், தியானத்தின் போது, இந்த வசனத்தின் அர்த்தம், அதன் முக்கியத்துவம் மற்றும் அதன் தாக்கங்களை நாம் கருத்தில் கொள்ளலாம். இயேசு நமது நோய்கள் எல்லாவற்றையும் சுமந்து தீர்த்தார், நமது எல்லா வலிகளையும் சுமந்தார் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். அவர் அதை நமக்குப் பதிலாகச் செய்தார், எனவே, இனி நாம் அவற்றைத் தாங்க வேண்டியதில்லை. நாம் நமக்குள் புரிந்துகொண்டு பகுத்தறிந்து செயல்படுகிறோம். நமது அன்றாட வாழ்க்கையில் அதை அப்பியாசப்படுத்துவதற்கான வழியை நாம் சிந்திக்கிறோம். ஒருவேளை இதற்கு முன்பு நமக்குள் அதைக் குறித்த தவறான கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் இருந்திருக்குமானால், ஆராய்ந்து பார்த்து அவற்றைப் புறக்கணிக்கத் தொடங்குகிறோம்.

வார்த்தையை ஆழமாகச் சிந்திக்கும்படி நாம் நேரத்தைச் செலவிடுவதில் தேவ ஆவியானவர் மகிழ்ச்சியடைகிறார் என்று நாம் நம்புகிறோம். பெரும்பாலும், நாம் வெளிப்புற கவனச்சிதறல்களிலிருந்து நம்மைப் பிரித்து, நம் மனதை வார்த்தையின் மீது செலுத்தும்போது, தியானிக்கும் வேளையில், கர்த்தருடைய ஆவியானவர் நம் சிந்தனைச் செயல்பாட்டில் மெதுவாக நம்மைத் தாங்கி வழிநடத்துகிறார். புதிய கருத்துக்களையும் நுண்ணறிவுகளையும் நம் மனதில் விதைப்பதன் மூலம் அவர் நம் எண்ணங்களை ஊக்குவித்து வழிநடத்துகிறார். பூர்வ காலத்து மனிதர்கள் வேதவசனங்களை எவ்வாறு வெளிப்படுத்த ஏவப்பட்டனர் என்பதை விவரிக்கும்போது, அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு கூறினார், *“தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்”* (2 பேதுரு 1:21). *“ஏவப்பட்டு”* என்ற அந்த வார்த்தை *‘ஃபெரோ’* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது அதாவது, “சுமந்து செல்வது, எடுத்துச் செல்வது” என்பது அதன் அர்த்தமாகும். இந்தப் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் பற்றி தி வைன்ஸ் டிக்ஸ்னரி என்று அழைக்கப்படும் அகராதி பின்வரும் கருத்துக்களைக் கொண்டுள்ளது. அது இவ்வாறு கூறுகிறது, *“அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் ‘ஏவப்பட்டனர்’ அல்லது உந்துவிக்கப்பட்டனர், தங்கள் சொந்த விருப்பங்களின்படி செயல்படவில்லை, அல்லது வெறுமனே தங்கள் சொந்த எண்ணங்களைப் பயன்படுத்தவில்லை, மாறாக தேவனால் வழங்கப்பட்ட மற்றும் ஊழியம் செய்யப்பட்ட வார்த்தைகளால் அவரது மனதை வெளிப்படுத்தினர்”* (பக்கம் 420, தாமஸ் நெல்சன் பப்ளிஷர்ஸ், 1985).

தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த புரிதலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றி அதிகம் பேசியதால், அவர்கள் தேட

வேண்டியிருந்தது *"தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்"* (1 பேதுரு 1:11). இதேபோல், நாம் வார்த்தையைக் குறித்து சிந்திக்கும் நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் நம் சிந்தனையில் நம்மைத் தாங்குகிறார். பரிசுத்த ஆவியானவர் நமது ஆசிரியர். இயேசு பேசுவதைக் கேட்ட விஷயங்களை பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் பேசுவார் என்று இயேசு கூறினார் (யோவான் 16:12-15). வார்த்தையைக் குறித்து சிந்திக்க அனைத்து கவனச்சிதறல்களிலிருந்தும் நாம் நம்மை ஒதுக்கி வைக்கும்போது இது பெரும்பாலும் நிகழ்கிறது. ஓ! இனிமையான பரிசுத்த ஆவியானவரான "கர்த்தருடைய கரம்" மெதுவாக நம் மீது இறங்கி, வார்த்தையைக் குறித்து நாம் ஆழமாக சிந்திக்கும்போது நம் சிந்தனையில் நம்மைத் தாங்கி நடத்தத் தொடங்கும்போது, அது மிகவும் மகத்தான அனுபவமாக இருக்கும். பொதுவாகவே, கர்த்தருடைய பிரசன்னம் மிகவும் பலமாக இறங்கி, அவர் அளிக்கும் அற்புதமான வெளிப்பாடு மற்றும் புரிதலில் மகிழ்ச்சி உண்டாகி, நன்றி நிறைந்த உள்ளத்தோடு கண்ணீர் வழியத் தொடங்குகிறது.

ஆழமான சிந்தனை நாம் யோசிக்கும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அது தேவனுடைய வார்த்தையால் புதிதாக்கப்பட்ட மனதை உருவாக்குகிறது. நம் மனதைப் புதுப்பிப்பது பற்றி வேதம் நமக்குக் கற்பிக்கிறது (ரோமர் 12:2a). நம் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாக (நடத்தையில்) மாற வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தப்படுகிறது (எபேசியர் 4:23). தேவனுடைய முழு ஆலோசனைக்கும் (தேவனுடைய வார்த்தையின் முழுமைக்கும்) புதிதாக்கப்பட்ட மனதைக் கொண்ட ஒருவர் *"தேவனுடைய நன்மையும், பிரியமும்,*

*பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்க"* (ரோமர் 12:2b) நபராக இருப்பார். தேவனுடைய வார்த்தையை தியானித்தல் / ஆழமாக சிந்தித்தல் என்ற ஒழுங்கும் கிரமமுமான பயிற்சியின் மூலம், *"நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்க"* (எபிரெயர் 5:14b) திறனை நாம் பெற்றிருப்போம்.

## மனக்கண்களால் பார்த்தல் – உங்கள் கற்பனை மூலம் வண்ணம் தீட்டுதல்

**ஆதியாகமம் 15:1-6**

**1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.**

**2 அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான்.**

**3 பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான்.**

**4 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி,**

**5 அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.**

**6 அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.**

தேவன் முதன்முதலில் ஆபிராமை ஒரு பெரிய தேசத்தின் தந்தையாக்குவதாக வாக்களித்ததிலிருந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. சாராளும் ஆபிராமும் இன்னும் குழந்தை இல்லாதவர்களாக இருந்தனர், இது அவர்களுக்குக் கவலையாக இருந்தது என்பது தெளிவாகிறது. இந்த

நேரத்தில், கர்த்தர் ஆபிராமிடம் பேசி, ஆதியில் சொன்ன வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்தினார். கர்த்தர் என்ன செய்தார் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். கர்த்தர் ஒரு நாள் இரவில் ஆபிராமை அவனது வீட்டிற்கு வெளியே அழைத்துச் சென்று, நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தைப் பார்க்கும்படி கட்டளையிட்டு, நட்சத்திரங்களை எண்ண முடியுமா என்று கேட்டார். பின்னர் அவர் ஆபிராமிடம், *“உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்”* (ஆதியாகமம் 15:5) என்றார். உண்மையில், தேவன் ஆபிரகாமுக்குத் தமது வாக்குத்தத்தத்தின் ஒரு காட்சியை அல்லது படத்தைக் கொடுத்தார். தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய தனது கற்பனையால் ஆபிராமால் இந்தப் படத்தை மீண்டும் மீண்டும் பார்க்க முடிந்தது. பின்னர், கர்த்தர் ஆபிரகாமிடம், *“... உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன்...”* (ஆதியாகமம் 22:17) என்றார்.

தியானத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு முக்கியமான செயல்முறையே மனக்கண்களால் பார்த்தல் ஆகும். தேவனுடைய வார்த்தை நமக்கு என்ன சொல்கிறது என்பதைநம்கற்பனையின்வல்லமையால்நாம்காண்கிறோம். உதாரணமாக, நாம் நோய்வாய்ப்பட்டிருந்தால், நம்மை நாமே நலமுடன் இருப்பதாகப் பார்க்கிறோம். வார்த்தை நம்மைப் பற்றிச் சொல்லும் அனைத்தின்படி நாம் இருப்பதையும், செய்வதையும் காண்கிறோம். தியானத்தின் செயல்பாட்டில் மனக்கண்களால் காணுதல், நம் கற்பனையை அதில் ஈடுபடுத்துகிறது.

பொதுவாக, திருச்சபையானது கற்பனையின் வல்லமையைப் பயன்படுத்துவதைத் தவறவிட்டுள்ளது. மறுபுறம், உலகம் ஊடக விளம்பரங்கள், அச்சிடப்பட்ட விளம்பரங்கள் போன்றவற்றின் மூலம் நம் கற்பனையைத்

தொடர்ந்து பாதிக்கிறது. கற்பனை என்பது நம் வாழ்வின் ஒரு முக்கிய பகுதியாகும். தேவன் அதை வடிவமைத்து, இந்தத் திறனைப் பயன்படுத்த நமக்குக் கொடுத்தார். நமது கற்பனை நமது நடத்தை மற்றும் நாம் எடுக்கும் முடிவுகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. அவை நமது வாழ்க்கையைப் பற்றிய நமது கண்ணோட்டத்தைப் பாதித்து, நமது சுயமரியாதையை தீர்மானிக்கின்றன. பலர் மிகவும் மோசமான தங்களைக் குறித்த தாழ்வு மனப்பான்மை (அல்லது ஒரு மோசமான சுய-கற்பனை) அல்லது மக்களைப் பற்றிய பயம், தெரியாததைப் பற்றிய பயம், ஆபத்தான முடிவுகளை எடுக்க பயம் அல்லது தாழ்வு மனப்பான்மையால் அவர்களை நிரப்பும் சுய-பிம்பத்தால் பாதிக்கப்படுகின்றனர். இருப்பினும், நாம் தேவனுடைய வார்த்தையைத் தியானித்து, தேவன் நம்மை எப்படிப்பட்ட நபராகப் பார்க்கிறார் என்று நமது மனக்கண்களால் காணத் (அல்லது கற்பனை செய்யும்போது) தொடங்கும்போது, நமது சுய-பார்வை மாறத் தொடங்குகிறது. உண்மையில், நமது சுய-பிம்பம் மட்டுமல்ல, வாழ்க்கையைப் பற்றிய நமது முழு கண்ணோட்டமும், நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளும் மாறத் தொடங்குகின்றன.

எண்ணாகமம் 13 ஆம் அதிகாரத்தில் நமக்கு அறிமுகமான ஒரு பழைய ஏற்பாட்டு சம்பவம் இங்கே ஒரு நல்ல எடுத்துக்காட்டாக செயல்படுகிறது. கானான் தேசத்தை சுதந்தரமாக வழங்குவதாக வாக்களித்து, கர்த்தர் தம் மக்களை எகிப்திலிருந்து அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வந்தார். வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கான ஆயத்தமாக, 12 கோத்திரங்களிலிருந்து, கோத்திரத்துக்கு ஒரு தலைவர் என 12 பேரை தேசத்தை உளவு பார்க்க அனுப்பும்படி கர்த்தர் மோசேயிடம் கட்டளையிட்டார். 12 பேரும் 40 நாட்கள் தேசத்தைச் சுற்றிப் பார்த்தனர். பின்னர் அவர்கள் திரும்பி வந்து தங்கள் அறிக்கையை சமர்ப்பித்தனர். தேசம் கனி நிறைந்ததாகவும் செழிப்பாகவும்

இருப்பதாக அவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர். இருப்பினும், அவர்களில் 10 பேர், தேசத்தில் வாழ்ந்த ராட்சதர்களைப் பார்த்து பயந்தார்கள். அவர்கள், *“நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள். நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; (ஏனாக்கின் சந்ததியினர் ராட்சதர்களிடமிருந்து வந்தவர்கள்); நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம்”* (எண்ணாகமம் 13:31-33) என்றார்கள். அவர்களில் இருவர் மட்டுமே நேர்மறையான அறிக்கையைக் கொண்டு வந்து, *“நாம் உடனே போய் அதை சுதந்தரித்துக்கொள்ளுவோம், நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்”* (எண்ணாகமம் 13:30) என்றார்கள். இந்த 12 பேரும் ஒரே ராட்சதர்களைப் பார்த்திருக்க வேண்டும், ஆனால் அவர்கள் நடந்து கொண்ட விதம் வேறுபட்டது. அவர்களில் இருவர் நம்பிக்கையுடன் இருந்தனர், ஏனென்றால் கர்த்தர் அவர்களுடன் இருக்கிறார் என்பதை அவர்கள் நினைவில் வைத்திருந்தார்கள் (எண்ணாகமம் 14:6-9). மற்ற 10 பேரும் தங்கள் எதிர்மறை கற்பனையை அவர்கள் மீது செலுத்தினர். அவர்கள் தங்கள் மனக்கண்ணால் பார்த்ததுதான் அவர்களை பலவீனப்படுத்தியது. ராட்சதர்களுக்கு முன்னால் சிறிய வெட்டுக்கிளிகளைப்போல தங்களைக் கற்பனை செய்து கொண்டனர். இது அவர்களை பயத்தால் நிரப்பியது, மேலும் தேவன் மீதான அவர்களின் நம்பிக்கையையும் கூட பறித்தது. பல கிறிஸ்தவர்கள் இந்த 10 பேரைப் போலவே வாழ்க்கையின் சூழ்நிலைகளைக் கடந்து செல்கிறார்கள் என்பது சொல்வதற்கு வருத்தமாக இருக்கிறது. அவர்கள்

தங்கள் மனக்கண்ணால் பார்ப்பது – அவர்களின் கற்பனை – விசுவாச வாழ்க்கையை வாழ்வதிலிருந்தும், கர்த்தருடைய வளமான ஆசீர்வாதங்களை அனுபவிப்பதிலிருந்தும் அவர்களைத் தடுக்கிறது. இருப்பினும், வேத தியானத்தின் ஒழுங்குமுறையின் மூலம், நம் கற்பனையின் சுவர்களில் புதிய படங்களை வரையலாம்.

வேதாகமத்தில் பல இடங்களில், குறிப்பாக பழைய ஏற்பாட்டில், நாம் பார்ப்பதை வைத்தே தேவன் நம்மை நடத்துகிறார் என்பது கவனிக்கத்தக்கது. அவர் தமது உடன்படிக்கையின் ஜனங்களுக்கு பழைய ஏற்பாட்டில் ஒரு கட்டளையைக் கொடுத்தார், அதாவது, *“நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து...”* என்று சொல்லியிருக்கிறார் (உபாகமம் 11:19; மற்றும் உபாகமம் 6:8; யாத்திராகமம் 13:9,16) ஐயும் காண்க. ஒரு கட்டத்தில், மக்கள் தங்கள் இடது கையிலும் நெற்றியிலும் வேதாகமத்தின் பகுதிகளைக் கட்டிக்கொண்டு இதைப் பயிற்சி செய்தனர். “அடையாளம்” என்ற வார்த்தையின் அர்த்தங்களில் ஒன்று “காணக்கூடிய ஒன்றின் விளக்கம்”. தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தம்முடைய வார்த்தையைப் பற்றியும், அவர் அவர்களுக்காகச் செய்ததைப் பற்றியும் கண்ணால் பார்க்கத்தக்க நினைவூட்டலைக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் பார்த்த காரியத்தில் தேவன் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினார், ஏனென்றால் அவர்கள் பார்த்த விஷயங்கள் கர்த்தருடைய செயல்களை நினைவுகூரும்படி அவர்களின் நினைவுகளைத் தூண்டும். புதிய ஏற்பாட்டில் நமக்கு அத்தகைய நடைமுறைப் பயிற்சி இல்லை என்றாலும், தேவனுடைய ஏராளமான வாக்குத்தத்தங்களை நாம் தொடர்ந்து “காண”வும் நினைவூட்டவும், நம் கற்பனைகளின் சுவர்களில்

தேவனுடைய வார்த்தையை வரைய வேண்டும் என்று நாம் தனிப்பட்ட முறையில் உணர்கிறோம். பழைய ஏற்பாட்டு பத்தியில் நமக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒரு வேத பகுதியில், கர்த்தர் இவ்வாறு கூறுகிறார், *"என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக"* (நீதிமொழிகள் 4:20,21a). மீண்டும் ஒருமுறை, வார்த்தையை தொடர்ந்து "பார்ப்பதன்" முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் ஒரு அறிவுறுத்தலைக் காண்கிறோம். ஒரு வகையில், இது நம் மனதில் நாம் கற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது மற்றும் கற்பனை செய்வதுடன் தொடர்புடையது என்று நாம் நம்புகிறோம்.

## அறிக்கையிடுதல் – தேவன் சொன்னதைச் சொல்லுதல்

**யோசுவா 1:8**

**இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.**

இங்கே, கர்த்தர் யோசுவாவை *"இரவும் பகலும்"* தியானிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். *"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக"* என்று சொல்லி அவர் ஆரம்பித்ததை கவனியுங்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், நியாயப்பிரமாண புஸ்தகத்தில் உள்ள வார்த்தைகள் யோசுவாவின் பேச்சின் ஒரு பகுதியாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கர்த்தர் யோசுவாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். எனவே, வேத தியானத்தின் ஒரு பகுதியாக, வேத வார்த்தைகளை நம் வாயில் வைத்திருக்க வேண்டும், அதாவது, வேத வார்த்தைகளைப் பேச வேண்டும் / திரும்பத் திரும்ப சொல்ல வேண்டும் / ஓத வேண்டும். முன்பு

விளக்கியது போல், இது எபிரெய மக்களின் வழக்கமாக இருந்தது. தியானத்தின் போது, அவர்கள் வேதாகம வசனங்களை மென்மையான, முனகல் ஒலியில் அமைதியாக மீண்டும் மீண்டும் சொன்னார்கள், அதே நேரத்தில் குனிந்து அல்லது முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டே, வெளிப்புற கவனச்சிதறல்களை முற்றிலுமாகத் தவிர்த்தனர்.

புதிய ஏற்பாட்டில், *"அறிக்கையிட்டு"* மற்றும் *"அறிக்கையிடுதல்"* என்ற வார்த்தைகள் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. இவை கிறிஸ்தவ விசுவாசத்தில் முக்கியமான வார்த்தைகள். கர்த்தராகிய இயேசுவை நம் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று நம் இருதயங்களில் விசுவாசிக்கும்போது இரட்சிப்பு உண்மையானதாகிறது (ரோமர் 10:9). மேலும், புதிய ஏற்பாடு நமது பாவங்களை அறிக்கையிடுதல் (1 யோவான் 1:9) மற்றும் நமது விசுவாசத்தை அறிக்கையிடுதல் (எபிரெயர் 3:1) பற்றி நமக்குக் கற்பிக்கிறது. "அறிக்கையிடு" அல்லது "அறிக்கையிடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட இரண்டு கிரேக்க வார்த்தைகளில், *'ஹோமோலோஜியா'* என்ற இந்த வார்த்தைக்கு "ஒரே விஷயத்தைப் பேசுதல், சம்மதித்தல், இசைந்துபோகுதல், உடன்படுதல்" என்று அர்த்தமாகும். வேத தியானத்தின் இந்த மூன்றாவது அம்சத்தை விவரிக்க "அறிக்கை" என்ற வார்த்தையைப் பயன்படுத்த நாம் தேர்வு செய்கிறோம், ஏனென்றால் கர்த்தர் தம்முடைய வார்த்தையை மீண்டும் சொல்ல / ஓத / பேச அறிவுறுத்தும்போதுஉண்மையில், அவர் தம்முடைய வார்த்தையை "அறிக்கையிட" நமக்கு அறிவுறுத்துகிறார். அவர் "ஒரே விஷயத்தைப் பேச", அவருடைய வார்த்தை சொல்வதைச் சொல்ல, நம் வார்த்தைகள் அவருடைய வார்த்தையுடன் "ஒத்துப்போக" வேண்டும் என்று நமக்குச் சொல்கிறார்.

உதாரணத்திற்கு, நாம் குறிப்பாக, ஏசாயா 53:4 மற்றும் மத்தேயு 8:17 ஆகிய பகுதிகளில் காணப்படும் வேதவசனங்களைப் பற்றிய வார்த்தையை தியானிக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். இந்த வசனங்கள், கிறிஸ்து சிலுவையில் நமக்குப் பதிலாக செய்து முடித்த தம்முடைய கிரியையின் மூலம் நமக்கு எவ்வாறு குணப்படுத்துதலை வழங்கினார் என்பதை விவரிக்கின்றன. இந்த வசனங்கள் எதைக் குறிக்கின்றன, அவை நமக்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கிறோம். இந்த வேதவசனங்கள் நம் வாழ்க்கையில் உண்மையாக நிறைவேற அவற்றை மனக்கண்களில் பார்க்கிறோம். நாம் நோயிலிருந்து விடுபட்டு, எல்லா வலிகளிலிருந்தும் குணமடைந்து, முழுமையாகவும், முற்றிலும் ஆரோக்கியமாகவும் இருப்பதாகக் கற்பனை செய்து பார்க்கிறோம். நமது வேத தியானத்தின் ஒரு பகுதியாக, இந்த வசனங்களை நாம் அறிக்கையிடுகிறோம். *“மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்”* (ஏசாயா 53:4) என்று மென்மையான ஆனால் கேட்கக்கூடிய குரலில் அறிக்கையிடுகிறோம். இவற்றை நாம் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்கிறோம். அல்லது இந்த வேத வசனங்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் பற்றி நமக்குள்ளேயே நாம் பேசிக்கொள்ள விரும்பலாம். என்னுடைய வேத தியான நேரங்களில், சில சமயங்களில், எனக்கு நானே வார்த்தையைப் பிரசங்கிக்கக் கூடும். மற்ற நேரங்களில், நான் தேவனிடத்தில் ஜெபத்தில் வேத வார்த்தைகளை அறிக்கையிடக் கூடும். உதாரணமாக, இந்த வசனங்களை நாம் தியானிக்கும்போது, நாம் ஜெபித்து, “பிதாவே, உம்முடைய வார்த்தைக்காக நான் உமக்கு நன்றி கூறுகிறேன். நன்றி பிதாவே, இந்த வசனங்களின்படி, இயேசு நிச்சயமாக என் நோய்களைச் சுமந்து என் வலிகளைச் சுமந்தார். அவர் என் அக்கிரமங்கள் அனைத்தையும் எடுத்துப்போட்டு, என் நோய்களைச் சுமந்தார். ஆகையால்,

என் சரீரத்தில் நோயையும் வியாதியையும் நான் சுமக்க வேண்டியதில்லை, ஆகையால், உமக்கு நன்றி பிதாவே," என்று கூறுகிறோம்.

இவ்வாறு வார்த்தையை அறிக்கையிடுவது நம் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இது நம் உள்ளான மனிதனில் தேவனுடைய வார்த்தையை வலுப்படுத்துகிறது. தேவனுடைய வார்த்தையைக் கேட்பதன் மூலம் விசுவாசம் வருவதால் நமது விசுவாசம் கட்டி எழுப்பப்படுகிறது (ரோமர் 10:17). இவ்விதமாக நாம் வார்த்தையை அறிக்கையிடும்போது, உண்மையில் நாம் வார்த்தையைக் கேட்கிறோம். வார்த்தையை அறிக்கையிடும் தொடர்ச்சியான நடைமுறை நிச்சயமாக நாம் பேசும் முறையை மாற்றும். உண்மையில், கர்த்தர் தமது வார்த்தையை தொடர்ந்து நம் வாயில் வைத்திருக்கும்படி நமக்கு அறிவுறுத்துவது, அவருடைய வார்த்தை சொல்வதற்கு முரணான எதுவும் நம் பேச்சின் ஒரு பகுதியாக இருக்கக்கூடாது என்பதைக் குறிக்கிறது.

## தேவனுடைய வார்த்தையை தியானித்தல் மூலம் தேவனைச் சந்தித்தல் மற்றும் அவருடன் தொடர்புகொள்ளுதல்

**சங்கீதம் 63:1-6**

**1 தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.**

**2 இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்.**

**3 ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.**

**4 என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.**

**5 நிணத்தையும், கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால்**

**உம்மைப் போற்றும்.**
**6 என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.**

வேத தியானம் என்பது முதலாவதாக தேவனுடன் நெருங்கிய ஐக்கியங்கொள்ளும் ஒரு நேரமாகும். மேலே மேற்கோள் காட்டப்பட்ட பகுதியில், சங்கீதக்காரர் தேவன் மீதான தனது தீவிர தாகத்தை வெளிப்படுத்துகிறார். தேவன் மீதான அவரது ஆசை அவரை பரிசுத்த ஸ்தலத்தில் தேவனைத் தேடத் தூண்டியது, மேலும் உயர்த்தப்பட்ட கைகளாலும் மகிழ்ச்சியான உதடுகளாலும் தேவனைத் துதிக்கத் தூண்டியது. இரவின் அமைதியான நேரத்தில் தேவனைத் தியானிக்க அது அவரைத் தூண்டியது. அதேபோல், தேவனுடனான நெருக்கத்திற்காக நம் இதயங்களின் தீவிர ஏக்கத்திலிருந்து, நம் எண்ணங்களையும் பேச்சையும் முழுமையாகக் கர்த்தரை நோக்கி இருக்கும்படி நாம் நிலைநிறுத்துகிறோம். நாம் வார்த்தையைப் பற்றிய ஆழமான தியானத்தில் செல்லும்போது, நம் அறிவுத்திறன் மூலம் வார்த்தையை வெறுமனே ஆராய்ந்து பார்ப்பதிலிருந்து விலகி, தேவனுடன் நாம் சந்தித்து உரையாடும் நேரத்திற்குள்ளாக கடந்து செல்கிறோம். தேவன் நிகழ்காலத்தில் நேரடியாக நம்மிடம் பேசும் வார்த்தையாக அது மாறுகிறது. அந்தக் கணத்தின் அமைதியில் அவரது அமைதியான சிறிய குரல் சத்தமாகவும் தெளிவாகவும் நமக்குக் கேட்கும். தேவனுடைய பிரசன்னம் நம்மை முழுமையாக நிரப்புகிறது. அது கர்த்தர் நம்மை உற்சாகப்படுத்த பயன்படுத்திய வார்த்தையின் மூலம் நம் உள்ளத்தின் ஆழத்தில் கிரியை நடப்பித்து, நம்மை மாற்றும் நேரமாக இருக்கிறது. இந்த நேரத்தில், கர்த்தர் நம் இதயங்களில் பேசுவதற்கும் செய்வதற்கும் நாம் பதிலளிக்க முடியும். தேவனின் வார்த்தையின் அடிப்படையில் நாம் மனந்திரும்புதல், விசுவாசித்தல், மகிழ்ச்சியடைதல், துதித்தல் மற்றும் நன்றியை வெளிப்படுத்தல் போன்றவற்றை

வெளிப்படுத்தலாம். உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் மூலமாகவோ, அல்லது மெல்லிய சத்தத்துடன் முணுமுணுக்கப்பட்ட வார்த்தைகள் மூலமாகவோ அல்லது வலுவாக உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை மூலமாகவோ, நம் எண்ணங்கள், உணர்வுகள், ஆசைகள் மற்றும் நம்பிக்கைகளை தேவனிடம் வெளிப்படுத்துகிறோம். சத்தியத்தின் வெளிப்பாடு நமக்குள் பொங்கி எழத் தொடங்குகிறது. அவருடைய ராஜ்யத்தின் இரகசியங்களைக் காணவும் புரிந்துகொள்ளவும் நமது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுகின்றன. நமது உள்ளான மனிதனில் சத்தியம் வலுப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிறது. நம் மனதில் உள்ள பொய்கள், வஞ்சகங்கள் மற்றும் கட்டுகள் தகர்க்கப்படுகின்றன. நாம் அவருடைய பரிசுத்த வார்த்தையைத் தியானிக்கும்போது, அது தனிப்பட்ட நெருக்கமான சந்திப்பு மற்றும் தேவனுடன் இனிமையான தொடர்புக்கான நேரமாக இருக்கும்.

## வேத தியானத்தின் விளைவுகள்

**2 கொரிந்தியர் 10:3-5**

**3 நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல.**

**4 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.**

**5 அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.**

விசுவாசிகள் எதிர்கொள்ளும் பல சவால்கள் மேலே உள்ள வேதவசனங்களில் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை *"அரண்கள்," "தர்க்கங்கள்," "தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமை"* மற்றும் *"ஒவ்வொரு எண்ணங்கள்"* போன்றவை ஆகும். இவை

அனைத்தும் விசுவாசியின் மனதைத் தாக்கக் கூடியவை. மனம் ஒரு போர்க்களமாகும். மேலும், போராட்டங்களின் இந்த ஒவ்வொரு பகுதியிலும் நாம் வெற்றியை அனுபவிக்கும் வகையில், வெற்றிகரமான யுத்தத்தை நடத்த தேவன் நமக்கு ஆயுதங்களைக் கொடுத்துள்ளார். இருப்பினும், பிரச்சனை என்னவென்றால், விசுவாசிகளாக மாறும் பலர், தேவனுடைய அறிவுக்கு (தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளபடி) எதிரான அரண்கள், கற்பனைகள், பகுத்தறிவு மற்றும் எண்ணங்களுடன் வாழத் தொடங்குகிறார்கள். இதன் விளைவாக, பலர் தங்கள் வாழ்க்கையின் பல பகுதிகளில் தோற்கடிக்கப்பட்டு அடிமைத்தனத்தில் உள்ளனர்.

வார்த்தையின் மீதான தியானம், எல்லாவற்றுக்குமான ஒரு முழுமையான முடிவு இல்லை என்றாலும், இது மனதில் ஏற்படும் இந்த சவால்களைச் சமாளிக்க உதவும் ஒரு முக்கியமான ஒழுங்குமுறையாகும். வார்த்தையின் மீதான தியானத்தின் ஒழுங்கும் கிரமமுமான பயிற்சியின் மூலம் அரண்களை நிர்மூலமாக்க முடியும். தேவனுடைய வார்த்தையை தியானித்து வருபவர் தேவனுடைய அறிவுக்கு (தேவனுடைய வார்த்தை) எதிரான எவ்வித கற்பனைகள், பகுத்தறிவு மற்றும் எண்ணங்களை சிறைபிடிப்பதை எளிதாக உணர முடியும்.

தொடர்ந்து வேதவாக்கியங்களைத் தியானிப்பதால் புதிதாக்கப்பட்ட மனதையும், புதிதாக்கப்பட்ட பேச்சையும், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது. நமது சிந்தனை முறைகள், நமது நற்பெயர், நமது சுயமரியாதை மற்றும் நமது மனதின் நிலையைப் பொறுத்து நமது ஆளுமையின் பிற அம்சங்கள் மாறத் துவங்குகின்றன. வாழ்க்கையைப் பற்றியும் நமது எதிர்காலத்தைப் பற்றியும் நாம் நேர்மறையானவர்களாகவும், தன்நம்பிக்கையுள்ளவர்களாகவும், நம்பிக்கையுள்ளவர்களாகவும்

மாறுகிறோம். தொலைநோக்குப் பார்வை இல்லாத மனிதர்களாக இருந்த நாம், அதன் பின்பு துணிச்சலான மற்றும் தீவிரமாக சொப்பனம் காண்பவர்களாக நாம் மாறுகிறோம். புதிதாக்கப்பட்ட சொற்களஞ்சியத்துடன் பேசத் தொடங்குகிறோம். வறுமை, தோல்வி மற்றும் சுய பரிதாபம் பற்றிய உரையாடல்களில் சிக்கிக்கொள்வதற்குப் பதிலாக, தேவன் மீதான நமது வலுவான நம்பிக்கையைப் பேசுகிறோம். வேத தியானத்தின் மூலம் நம் இதயங்களில் வார்த்தையைத் தொடர்ந்து விதைத்து, அதற்கு நீர்ப்பாய்ச்சுவது தேவன் மீது நமக்குள் துடிப்பான நம்பிக்கையை உருவாக்குகிறது.

## வேத தியானத்தின் பலன்கள்

**சங்கீதம் 1:1-3**

**1 துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,**

**2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**
**3 அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.**

தேவனுடைய வார்த்தையே அற்புத விதை. அது உற்பத்தி செய்யத்தக்க ஆற்றலைக் கொண்டுள்ளது. நம் இதயங்களில் விதைக்கப்படும் வார்த்தையாகிய விதை, தேவனுடைய மகத்துவத்தை நம் வாழ்வில் காணச் செய்யும். தியானத்தின் மூலம்தான் நாம் தேவனுடைய வார்த்தையாகிய விதையை நம் இதயங்களில் விதைத்து வளர்க்கிறோம். விதை முளைத்து, உரிய நேரத்தில் பலனைத் தரும். எனவே, தியானத்தின் தொடர்ச்சியான பயிற்சி, தேவனுடைய வாக்குத்தத்தங்களை வெளிப்படையாக நிறைவேற்றுவதற்கான ஒரு முக்கியமான இணைப்பாகும்.

தேவனுடைய வார்த்தை நம் வாழ்வில் விளைவிக்கக்கூடிய சில கனிகளைக் கவனியுங்கள்.

- தேவனுடைய வார்த்தை என்பது அழியாத விதை, அது ஆவியின் கிரியையுடன் சேர்ந்து நம் வாழ்வில் புதிய பிறப்பை ஏற்படுத்துகிறது. (1 பேதுரு 1:23)
- தேவனுடைய வார்த்தை நம் உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் குணப்படுத்தும் மருந்தைப் போன்றதாய் இருக்கிறது. (நீதிமொழிகள் 4:20-22; சங்கீதம் 107:20)
- தேவனுடைய வார்த்தையை தியானிக்கத் துவங்குவதன் மூலம், அது நம் வாழ்வில் நுண்ணறிவு, புரிதல் மற்றும் ஞானத்தைக் கொண்டுவருகிறது. (சங்கீதம் 119:98-100,130)
- தேவனுடைய வார்த்தை செழிப்பையும் வெற்றியையும் தருகிறது. (யோசுவா 1:8; சங்கீதம் 1:3)
- தேவனுடைய வார்த்தை ஆவிக்குரிய வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. (அப்போஸ்தலர் 20:32)

மேலும், தேவன் தம்முடைய வார்த்தையில்தான் நமக்குக் கொடுத்த பல ஆசீர்வாதங்கள் உள்ளன.

வேத வசனத்தைத் தியானிப்பதன் மூலம் இந்த விதைகளை விதைத்து வளர்த்தால், இவை அனைத்தையும் நம் வாழ்வில் உற்பத்தி செய்ய முடியும்.

தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து தியானிக்கும் ஒரு மனிதன், நன்கு நீர் பாய்ச்சப்பட்ட மரத்தைப் போன்றவனாய் இருப்பான். அவனது வேர்கள் தொடர்ச்சியான ஊட்டச்சத்து மற்றும் புத்துணர்ச்சியைப் பெறும் வண்ணம் இணைக்கப்பட்டுள்ளன. நாம் தொடர்ந்து வார்த்தையைத் தியானிக்கும்போது இதுதான் நடக்கும். நமது உள்ளான

மனிதன் அளவுக்கு அதிகமான ஊட்டச்சத்து மற்றும் புத்துணர்ச்சியுடன் ஆசீர்வதிக்கப்படுகிறான். நம் வாழ்க்கை பலனளிப்பதாகவும் மிகுந்த கனிகொடுப்பதாகவும் இருக்கும்.

## வேத தியானத்தின் ஒழுங்குமுறையை வளர்த்துக்கொள்ளுதல்

### *தினசரி ஒழுங்குமுறை*

**சங்கீதம் 119:97**

**உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம்.**

தேவனுடைய வார்த்தையை தியானிக்கும் ஒரு தினசரி ஒழுங்குமுறையை வளர்த்துக்கொள்ள நாங்கள் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறோம். இது ஒரு பழக்கமாக, மாற்றிக்கொள்ள முடியாத தேவபக்திக்குரிய ஒரு பழக்கமாகக் கூட இருப்பதாக. வார்த்தையை தியானித்தல் என்பது நாம் விரும்பாத ஒன்றாக இருந்தாலும் அல்லது அது நமக்குப் பிடிக்காவிட்டாலும் கூட இதைச் செய்கிறோம் என்பதைக் குறிக்கும் ஒரு ஒழுங்குமுறையாகும். நாம் அதைச் செய்ய முடியாதபடிக்கு மிகவும் அலுவல் நிறைந்தவர்களாக இருப்பதாகத் தோன்றலாம். மறுபுறம், தேவனுடைய வார்த்தையின் மீதான முழுமையான மகிழ்ச்சியால் இதைச் செய்ய வேண்டும். நாம் கர்த்தரை நேசிக்கிறோம், ஆகவே, அவருடைய வார்த்தையை நாம் காத்து நடக்கிறோம். இது வேத தியானத்தின் மூலம் நாம் கவனச்சிதறல் அற்ற நேரங்களை தேவனுடைய வார்த்தைக்குக் கொடுக்கும்படி நம்மை நடத்திச் செல்கிறது.

### *சிறப்புத் தேவை நேரங்களில்*

**சங்கீதம் 119:23,24,78**

**[23] பிரபுக்களும் உட்கார்ந்து எனக்கு விரோதமாய்ப் பேசிக் கொள்ளுகிறார்கள்; உமது அடியேனோ, உமது பிரமாணங்களைத் தியானிக்கிறேன்.**

**[24] உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது.**
**[78] அகங்காரிகள் என்னைப் பொய்களினால் கெடுக்கப் பார்த்தபடியால் வெட்கப்பட்டுப்போவார்களாக; நானோ உமது கட்டளைகளைத் தியானிப்பேன்.**

பல சமயங்களில் நான் பல்வேறு போராட்டங்கள், சவால்கள், கேள்விகள் மற்றும் கவலைகளை எதிர்கொண்டிருக்கிறேன், தொடர்ந்து அவற்றை எதிர்கொண்டு வருகிறேன். இதுபோன்ற சமயங்களில், ஆவியில் ஜெபிப்பது மட்டுமல்லாமல், நான் சந்திக்கும் சவாலை எதிர்கொள்ள வேதவசனங்களை தியானிக்க முயற்சிக்கிறேன். என் மனம் குழப்பமடைந்து, கேள்விகள் நிறைந்ததாகவும், நிச்சயமற்றதாகவும் இருக்கலாம், ஆனால் இந்த விஷயத்தில் தேவனுடைய எண்ணங்களை வெளிப்படுத்தும் வேதவசனங்களை நான் நாடுகிறேன். நான் அவற்றைப் பற்றி தியானிக்கிறேன். இவை என் இதயத்தில் சமாதானம், அமைதி மற்றும் நிச்சயத்தைக் கொண்டுவருகின்றன. மற்ற நேரங்களில், நான் ஒரு குறிப்பிட்ட சவாலை கையாள வேண்டியிருக்கலாம், மேலும் நான் கர்த்தரிடமிருந்து கூடுதல் பலத்தையும் ஊக்கத்தையும் பெற வேண்டியிருக்கும் என்பதை நான் அறிவேன். இதுபோன்ற சமயங்களில், சூழ்நிலைக்குப் பொருத்தமான வேதவசனங்களை மீண்டும் ஒருமுறை தேடி அவற்றைப் பற்றித் தியானிக்கிறேன். வேதவசனங்கள் நம்பிக்கை மற்றும் பலத்தின் ஆதாரமாகின்றன. நாம் அனைவரும் அத்தகைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஒரு அர்த்தமுள்ள பயிற்சி

**சங்கீதம் 119:148**

**உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும்.**

தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பது அர்த்தமற்ற

பயிற்சி அல்ல, அது ஆவிக்குரியவர்களாய் இருப்பவர்களுக்கு மட்டுமான பயிற்சி அல்ல. அதை நாம் அனைவரும் பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். உடனடியாக சரிசெய்ய விரும்புதல் மற்றும் உடனடி அற்புதங்களை விரும்பும் உலகில் (கிறிஸ்தவ உலகம் கூட), ஆவிக்குரிய ஒழுங்குமுறையை வளர்ப்பது என்ற காரியம் பிரபலமாக இருக்காது. இருப்பினும், ஆவிக்குரிய விஷயங்களில் நம்மைப் பயிற்சி செய்ய நாம் ஊக்குவிக்கப்படுகிறோம் (1 தீமோத்தேயு 4:7). உடற்பயிற்சி என்பது ஒரு ஒழுங்குமுறை. ஒழுங்குமுறை (சுய ஒழுக்கம்) அவ்வளவு எளிதான விஷயமாக இல்லை என்று தோன்றும் நேரங்கள் இருக்கலாம். அதற்கு சில தியாகங்கள் கூட தேவைப்படலாம். இருப்பினும், ஒழுங்குமுறைக்குப் பலனாக கிடைக்கும் வெகுமதிகள் விலைமதிக்க முடியாதவை மற்றும் நீடித்து நிலைப்பவை. வேத வார்த்தையைத் தியானிப்பதில் மகிழ்ச்சி அடைபவர்களில் நீங்களும் ஒரு நபராக இருப்பீர்களாக!

## நடைமுறைப்படுத்துவதற்கான குறிப்புகள்

தேவனுடைய வார்த்தையைத் தியானிக்கும் ஒழுங்குமுறையை வளர்க்க உதவும் சில நடைமுறைக் குறிப்புகளை இப்போது நான் பகிர்ந்துகொள்கிறேன். இவை சட்டங்களோ அல்லது விதிகளோ அல்ல, நாம் சில செயல்முறை, வழிமுறை அல்லது அமைப்புக்குநம்மைஒருபோதும்அடிமைப்படுத்திக்கொள்ளக் கூடாது. என் வாழ்க்கையில் பயனுள்ளதாக நான் கண்டறிந்த விஷயங்களை நான் பகிர்ந்துகொள்கிறேன்; இது என் இளம் வாலிப் பருவத்தின் ஆரம்பத்தில் நான் செய்யத் தொடங்கிய ஒரு செயல்முறையாகும். இந்தக் குறிப்புகள் உங்களுக்கு பயனுள்ளதாகவும், உங்கள் சொந்த ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஏற்ப நீங்கள் மாற்றியமைக்கக்கூடியதாகவும் இருக்கக் கூடும். கர்த்தருடைய வார்த்தையைத் தியானிப்பதைப் பயிற்சி செய்வது எப்படி என்பது குறித்த இன்னும் பிற யோசனைகளை அவர் உங்களுக்கு வழங்கக்கூடும், அது

உங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் இருக்கலாம்.

நான் இங்கே மூன்று நடைமுறை கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கிறேன்.

1) வார்த்தையாகிய விதைகள்

2) அனுதினமும் வார்த்தையை தியானிக்கும் பழக்கம்

3) வேதாகமத்தை தியானித்து வாசித்தல்

## *வார்த்தையாகிய விதைகள்*

என்னுடைய ஆவிக்குரிய பயணத்தின் ஆரம்பத்தில், என்னுடைய இளம் வாலிபப் பருவத்தில், வேதாகம வசனங்களை கருப்பொருள்களாக அல்லது தலைப்புகளாக வகைப்படுத்தக் கற்றுக்கொண்டேன். இது ஒரு நூலகத்தில் உள்ள புத்தகங்கள் வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுவது போன்றது. அத்தகைய தலைப்புகள் / கருப்பொருள்களின் மாதிரி இந்தப் புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது கருப்பொருளில் தேவனுடைய வார்த்தையைத் தியானிக்க நான் விரும்பும்போது, என்னால் எளிதாக அவற்றை நினைவுகூர்ந்து, அதனுடன் தொடர்புடைய வேத வசனங்களை வாசிக்க முடியும். எனவே, விசுவாசம் என்ற தலைப்பில் தியானிக்க வேண்டும் என்று நான் உணர்ந்தால், விசுவாசம் என்ற தலைப்பில் நான் சேகரித்த வேத வசனங்களை வாசிப்பேன். இது ஒரு விதையை விதைப்பது போன்றது. இயற்கை உலகில், ஒவ்வொரு விதையும் தன் தன் சொந்த வகையை உற்பத்தி செய்கிறது என்பதை நாம் அறிந்திருப்பதால், நாம் விரும்பும் அறுவடைக்கு ஏற்ப ஒரு விதையை விதைக்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். இதேபோல், குறிப்பிட்ட தலைப்புகள் அல்லது கருப்பொருள்களில் வேதவசனங்களைத் தியானிப்பதன் மூலம், நமது

தேவைகளுக்கு ஏற்ப விதைகளை விதைக்கிறோம். இது மனப்பாடம் செய்யும் செயல்முறைக்கும் உதவுகிறது, ஏனெனில் நீங்கள் இந்த வேத வசனங்களை மீண்டும் மீண்டும் தியானிக்கும்போது, அவை உங்கள் நினைவில் பதிந்துவிடும்.

ஒரு ஆராதனையில் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் வார்த்தை ஊழியம் செய்யத் தயாராகும்போதும் நான் இதைப் பயன்படுத்துகிறேன். நாம் ஒவ்வொரு முறையும் வார்த்தை ஊழியம் செய்யும்போது அடையாளங்கள், அற்புதங்கள், அதிசயங்கள் மற்றும் சுகமளித்தல்கள் மூலம் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படையான செயல்களைக் காண விரும்புகிறோம், அதே நேரத்தில் குறிப்பாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை எதிர்பார்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட ஆராதனை நேரங்களும் உள்ளன. நற்செய்தியை அறிவிக்கும் கூட்டங்கள், விசேஷ சுகமளித்தல் மற்றும் அற்புதங்களை நிகழ்த்தும் ஆராதனை போன்றவற்றை நாங்கள் நடத்துவதுண்டு, அங்கு மக்கள் அற்புதங்களையும் சுகமளித்தல்களையும் பெற்றுக்கொள்வதற்காக அவர்களுக்கு ஊழியம் செய்வதே எங்கள் நோக்கமாக இருக்கும். அத்தகைய ஊழியங்களில் ஊழியம் செய்வதற்கான ஆயத்தத்தின் ஒரு பகுதியாக, அந்நியபாஷைகளில் அதிகமாக ஜெபிப்பது மட்டுமல்லாமல், ஆவியின் அபிஷேகம், விசுவாசியின் அதிகாரம், ஆவியின் வரங்கள், சுகமளித்தல், இயேசுவின் அற்புதங்கள், விசுவாசம், தீர்க்கதரிசனம் போன்ற தலைப்புகளுடன் தொடர்புடைய வேதவசனங்களைப் பற்றி தியானிக்கவும் நான் நேரம் ஒதுக்குகிறேன். இது என் ஆவியைத் தெளிவாக்கி, ஒருங்கிணைத்து, ஊழியம் செய்ய என்னை ஆயத்தப்படுத்துகிறது.

## *அனுதினமும் வார்த்தையை தியானிக்கும் பழக்கம்*

ஒரு குறிப்பிட்ட விளையாட்டுக்காகப் பயிற்சி பெறும் விளையாட்டு வீரர்கள் வழக்கமாக வாராந்தோறும்

பயிற்சி செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒரே மாதிரியான உடற்பயிற்சி பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கிறார்கள், ஒவ்வொரு முறையும் மீண்டும் மீண்டும் சற்று முன்னோக்கிச் செல்கிறார்கள். எனது ஆவிக்குரிய பயணத்தின் ஆரம்ப ஆண்டுகளில், நான் தினசரி வார்த்தை தியான வழக்கத்தை என் பழக்கவழக்கங்களில் ஒன்றாக இணைத்தேன். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட தலைப்புகள் / கருப்பொருள்கள் குறித்து தியானிக்க முடிவு செய்தேன். என்னிடம் இருந்த வார்த்தை விதைகளிலிருந்து எடுத்து வேத வசனங்கள் மூலம் அவற்றை வாசிப்பேன், ஒவ்வொரு வேத வசனத்தையும் ஒரு கணம் தியானிப்பேன் - அதை வாசித்தல், அதை அறிக்கையிடுதல், அதனுடன் இணைந்து தேவனை ஆராதித்தல் போன்ற செயல்களைச் செய்வேன். அதைத் தொடர்ந்து, மிகவும் அவசியமான ஒன்றான கருப்பொருள்கள் / தலைப்புகளைக் கொண்டு தியானிக்கும் முறைக்கு நான் கடந்து சென்றேன். உங்கள் தற்போதைய சூழ்நிலைகள் / தேவைகளைப் பொறுத்து இதேபோன்ற தினசரி வழக்கத்தை நீங்கள் உருவாக்க விரும்பலாம்.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், அனுதினமும் வார்த்தையை தியானிக்கும் பழக்கவழக்கத்திற்காக நான் பயன்படுத்திய ஒரு உதாரணம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| ஜெபம் உதாரத்துவம் | நம்பிக்கை | தெய்வீக ஆரோக்கியம் | குடும்பம் | ஞானம் & புரிதல் | வெற்றி & செழிப்பு | ஊழியம் & அற்புதங்கள் |

## *வேதாகமத்தை தியானித்து வாசித்தல்*

என்னுடைய ஆவிக்குரிய பயணம் முழுவதும் எனக்கு மிகவும் உதவிய பயிற்சிகளில் ஒன்று வேதத்தை தியானித்து வாசிக்கும்

பழக்கமாகும். பல வேத வாசிப்புத் திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அத்தியாயங்களையும் புத்தகங்களையும் முடிப்பதில் கவனம் செலுத்துகின்றன. இது நல்லது மற்றும் அதில் நன்மைகள் இருந்தாலும், நான் மேலோட்டமாக வாசிப்பதை விட வாசித்துக்கொண்டே தியானிப்பதில் எனது நேரத்தை செலவிட விரும்புகிறேன். எனவே, வார்த்தையை வாசிப்பதில் எனது வழக்கமான நேரம் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அத்தியாயங்களை முடிப்பதில் அல்ல, மாறாக வார்த்தையிலிருந்து வெளிப்பாடுகளைப் பெறுவதில் கவனம் செலுத்துகிறது. எனவே, நான் ஒரு அத்தியாயத்தில் ஒரு சில வசனங்களை வாசித்து, அந்த ஒரு சில வசனங்களைப் பற்றி தியானித்து, தேவனைச் சந்திப்பதிலும், வெளிப்பாட்டைப் பெறுவதிலும், அதை உள்வாங்குவதிலும், பின்னர் நான் முன்னேற வேண்டும் என்று நினைக்கும்போது அடுத்தடுத்த வசனங்களுக்குச் செல்வதிலும் நேரத்தைச் செலவிடுகிறேன். பெரும்பாலும், நான் ஒரே வசனத் தொகுப்பில் சில நாட்கள் செலவிடக் கூடும், 30 நிமிடங்கள் அல்லது அதற்கும் அதிகமான நேரம் வாசிப்பு, சிந்தனை, தியானம் மற்றும் தேவனைச் சந்திப்பதிலும் செலவிடுவதுண்டு. பெரும்பாலும், அந்த வசனங்கள் மூலம் தேவனுடைய பிரசன்னம் என்னை முற்றிலும் நிரப்பும், வெளிப்பாடு பொங்கி வரும், நான் பார்க்கும் மற்றும் புரிந்துகொள்ளும் விஷயங்களை எழுதுவேன். என் வாழ்க்கை மாற்றமடைந்துள்ளது. நிச்சயமாக, பல பிரசங்கங்கள் அத்தகைய காலங்களிலிருந்துதான் பிறந்தன.

உதாரணமாக, 2019 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தில், நான் மாற்கு சுவிசேஷத்தை மீண்டும் வாசிக்க ஆரம்பித்தேன். நான் மாற்கு 1:1ஐ வாசித்தேன், *"தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்."* அந்த ஒரு வசனத்தைக்கூட என்னால் கடந்து செல்ல முடியவில்லை. நான் மாற்கு 1:1-ஐ நான்கு நாட்கள்,

ஒவ்வொரு நாளும் சுமார் 30 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல், அந்த வசனத்தில் மூழ்கி, ஆழ்ந்து வாசித்தேன். அந்த வசனத்தை நான் ஒவ்வொரு முறை வாசிக்கும்போதும் தேவனுடைய பிரசன்னம் என்னை முற்றிலுமாக நிரப்பியது. “தேவனுடைய குமாரன்” என்ற வார்த்தைகள் அந்தப் பக்கத்திலிருந்து தனித்து நின்று பேசியது. மாற்கு 1:1-ன் அந்தப் பகுதியை என் கற்பனையில் தியானித்தபோது, காலத்தின் தொடக்கத்திற்கு முன்பு, நித்திய வார்த்தை பிதாவுடனும் ஆவியுடனும் ஒன்றாக இருப்பதைக் காண நான் நித்தியத்திற்குத் திரும்பிச் சென்றேன், பின்னர் நமக்குத் தெரிந்தபடி, நித்திய வார்த்தை தம்மை வெளிப்படுத்தவும், அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் ஏறெடுத்துக்கொள்ளப்படுதல் மூலம் அவர் செய்ததைக் காணவும் காலத்தின் வழியாகப் பயணித்தேன். தொடர்புடைய வேதவசனங்கள் வேதாகமத்தின் மற்ற பக்கங்களிலிருந்து கண்களுக்குத் தெரிவதைப் போல் தோன்றியது. நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷம் இந்த தேவனுடைய குமாரனின் சுவிசேஷம் என்ற சத்தியத்தைப் புரிந்துகொள்வது என்னை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. மாற்கு 1:1-ல் உள்ள அந்த நான்கு நாட்களும், உண்மையிலேயே தேவனுடைய குமாரனைச் சந்தித்த ஒரு மிகப்பெரிய அனுபவமாக அது இருந்தது. என்னால் முடிந்த அனைத்தையும் நான் எழுதினேன். அந்த வார்த்தையை என் ஆவியில் பற்றிக்கொண்டேன், அது என் மனதிற்குள் ஆழமாகப் பதிந்தது. இறுதியாக 2019 ஆம் வருடம் கிறிஸ்துமஸ் தினத்தன்று நான் அதைப் பிரசங்கித்தேன், அது அங்கிருந்தவர்களுக்கு ஊழியம் செய்தது (அந்தப் பிரசங்கத்தை இங்கே காணலாம் **apcwo.org/sermons**).

இந்தப் பயிற்சியை நீங்கள் உங்களுக்குள் வளர்த்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதில் களிகூருவீர்களாக.

# 7

# விதையானது பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும்

## சாத்தான் வார்த்தையைப் பின்தொடர்ந்து வருகிறான்

**மத்தேயு 13:19**

**ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.**

**மாற்கு 4:14,15**

**14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.**
**15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்; இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.**

**லூக்கா 8:11,12**

**11 அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்.**
**12 வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான்.**

விதைப்பவரின் உவமை நமக்கு ஒரு முக்கியமான ஆவிக்குரிய ஆழமான புரிதலைத் தருகிறது – சாத்தான் வார்த்தையைப் பறிக்கும்படி பின்தொடர்ந்து வருகிறான். இது நம் இதயங்களில் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதும், ஏற்றுக்கொள்வதும் மற்றும் பெருகச் செய்வதும் எவ்வளவு முக்கியம் என்பதைக் காட்டுகிறது! நாம் வார்த்தையை ஏற்றுக்கொண்டால் அது நம் வாழ்வில் விளைச்சலை உண்டாக்கும், மற்றும் ஜெயம், அதிகாரம் மற்றும் ஆளுகையைப் பெற்று நடக்க வைக்கும்

என்பதை சாத்தான் அறிவான். 1 யோவான் 2:14-ஆவது வசனத்தில் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியது போல வாழ்வோம், *“... வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.”*

ஆகவேதான், தேவனுடைய வார்த்தையைக் கேட்பதிலிருந்து நம்மைத் தடுக்க, சாத்தான் பின்வருவனவற்றை செய்ய முயற்சிப்பதில் தனது ஆற்றலை முதலீடு செய்வான்

- ஆர்வமின்மை, சோம்பல், அக்கறையின்மை, பரபரப்பு, கவனச்சிதறல்கள் போன்றவற்றின் மூலம் வார்த்தையைக் கேட்பதிலிருந்து நம்மைத் தடுத்தல்.
- குழப்பங்கள், பொய்கள், வஞ்சகங்கள் போன்றவற்றின் மூலம் அதைப் புரிந்துகொள்வதைத் தடுத்தல்.
- சந்தேகங்கள், அவிசுவாசம், பயம் போன்றவற்றின் மூலம் அதை நம்புவதைத் தடுத்தல்.

இருப்பினும், கர்த்தராகிய இயேசு சாத்தானின் தந்திரங்களை நமக்காக வெளியரங்கமாக்கியிருப்பதால், நாம் அதற்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து, நம் இருதயங்களில் தேவனுடைய வார்த்தையை ஏராளமாகப் பதிய வைக்க நம் பங்கைச் செய்வதை நாம் உறுதிசெய்யலாம். தேவனுடைய வார்த்தை உங்களில் ஏராளமாக வாசமாயிருக்கட்டும்!

## விதையைப் பாதுகாத்து வளரச் செய்யுங்கள்

விதைப்பவரின் உவமையிலிருந்து நாம் பெறும் மற்றொரு முக்கியமான நுண்ணறிவு என்னவென்றால், விதை பலனைத் தர வேண்டுமென்றால், அது காலப்போக்கில் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். தோட்டக்கலை

அல்லது விவசாயம் பற்றிய நமது அறிவிலிருந்து இதை நாம் எளிதாகப் புரிந்துகொள்கிறோம்.

விதை உற்பத்தி செய்வதைத் தடுக்கக்கூடிய அல்லது அறுவடையைப் பறிக்கக்கூடிய அச்சுறுத்தல்களான, நாம் எதிர்கொள்ள வேண்டிய இரண்டு முக்கியமான பகுதிகளை கர்த்தராகிய இயேசு எடுத்துரைத்தார். அவர் பின்வருவனவற்றை குறிப்பிட்டிருக்கிறார்,

- வார்த்தைக்கு எதிரான துன்புறுத்தல்கள் மற்றும் உபத்திரவங்கள் மற்றும்
- இவ்வுலகக் கவலைகள், ஐசுவரியத்தின் மீதான மயக்கம், மற்ற பொருட்களின் மீதான ஆசை, வாழ்க்கையின் இன்பங்கள் போன்றவை.

அறுவடையைத் தடுக்கும் இவ்விரண்டு பகுதிகளையும் நாம் தனித்தனி அத்தியாயங்களில் ஆராய்ந்து பார்ப்போம்.

மற்றொருமுக்கியமானஅம்சம்விதையைவளர்ப்பதாகும். இயற்கையான முறையில், விதையானது முளைத்து, வளர்ந்து, கனி கொடுக்கும்படிக்கு, அதற்குப் போதுமான சூரிய ஒளி, தண்ணீர் மற்றும் ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதை நாம் உறுதிசெய்கிறோம். அதேபோல், வார்த்தையாகிய விதையை வளர்க்கக்கூடிய ஒரு பொருத்தமான சூழலை நம் இதயங்களில் பராமரிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையானது தண்ணீர் (எபேசியர் 5:26) மற்றும் ஒளி (சங்கீதம் 119:105) என்றும் குறிப்பிடப்படுகிறது. எனவே, வார்த்தையைத் தொடர்ந்து தியானிப்பதன் மூலமும் (தண்ணீரையும் ஒளியையும் வழங்குவதன் மூலமும்), தொடர்ச்சியான வெளிப்பாட்டைப் பெறுவதன் மூலமும் (ஒருவேளை ஊட்டச்சத்துக்கள் போன்றவை) மற்றும் ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்க்கையை வாழ்வதன் மூலமும் (கொலோசெயர் 3:15; எபேசியர் 5:18,19) வார்த்தையாகிய

விதையை நாம் வளர்க்கிறோம்.

## தேவனுடைய ராஜ்யத்தின் விதை-கொள்கை

**மாற்கு 4:26-29**

**26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து;**

**27 இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.**

**28 எப்படியென்றால், நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும்.**

**29 பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார்.**

பொதுவாக விதை முளைத்தல் செயல் மண்ணுக்கு அடியில்தான் நடக்கும். நாம் அதைப் பார்க்காவிட்டாலும் அது நடக்கிறது என்பதை நாம் அறிவோம். அதற்கு சற்று காலம் எடுக்கும். நாட்கள் செல்லச் செல்ல, முளைகள் மண்ணுக்கு மேலே தோன்றும்போது, நாம் வளர்ச்சிக்கான அறிகுறிகளைக் காண்கிறோம். செடி அல்லது மரம் வளர்ந்து பழம் கொடுக்க இன்னும் அதிக காலதாமதம் ஆகும்.

விதைப்பவரின் உவமைக்குப் பிறகு, கர்த்தராகிய இயேசு மற்றொரு உவமையைச் சொன்னார், மீண்டும் ஒருமுறை விதை உவமையைப் பயன்படுத்தி, தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி நமக்குக் கற்பித்தார் (மாற்கு 4:26-29). இந்த உவமையில், தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு பொதுவான விதைக் கொள்கை எவ்வாறு செயல்படுகிறது என்பதை கர்த்தராகிய இயேசு நமக்கு வெளிப்படுத்தினார். இந்த விதைக் கொள்கை தேவனுடைய ராஜ்யத்தில் நம் வாழ்க்கையின் பல அம்சங்களுக்குப் பொருந்தும். இந்த விதைக் கொள்கையானது, தேவனுடைய வார்த்தையான அற்புத விதை நம் வாழ்வில் விளைச்சலை உண்டாக்கும் செயல்முறைக்கும் பொருந்தும்.

தேவனுடைய ராஜ்யத்தின் விதைக் கொள்கையைப் பற்றிய முக்கிய நுண்ணறிவுகள் பின்வருமாறு:

1) விதையானது விதைக்கப்பட வேண்டும்.

2) வளர்ச்சிக்கான அறிகுறிகள் எதுவும் வெளிப்படுவதற்கு முன்பு காலம் கடந்து செல்கிறது.

3) அது எப்படி நடக்கிறது என்று நமக்குத் தெரியாவிட்டாலும் விதையானது விளைச்சலை உற்பத்தி செய்யும்.

4) அறுவடை காலம் வரும்போது, நாம் அரிவாளை எடுத்து அவற்றை அறுவடை செய்து சேகரிக்க வேண்டும் (வேறு வார்த்தைகளில் சொன்னால், அறுவடையைச் சேகரிப்பதில் நமக்கும் ஒரு பங்கு இருக்கிறது).

புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான சத்தியம் என்னவென்றால், விதையானது தன் விளைச்சலை உற்பத்தி செய்வதற்கு முன்பு ஒரு காலம் கடந்து செல்கிறது. நம் இதயங்களில் விதைக்கப்பட்ட (விதைக்கப்பட்டு வருகிற) தேவனுடைய வார்த்தையாகிய இந்த விதைகள் ஒரே இரவில் அமோகமான அறுவடையைத் தந்துவிடாது. அதைப்போலவே, நம் இருதயங்களில் விதைத்து வரும் விதைகளின் விளைச்சலையும் பலன்களையும் காண்பதற்கு முன்பு, நாம் கடந்து செல்ல வேண்டிய ஒரு காலகட்டம் இருக்கும்.

ஆரம்பத்தில், நாம் முப்பது மடங்கு அறுவடையை மட்டுமே அனுபவிக்க நேரிடலாம். ஆனால் விதை முளைத்து வளர தேவையான ஒரு காலகட்டம் உள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம். அறுவடை காலம் விரைவில் வரும் என்பதை அறிந்து, வார்த்தையை நம் இதயங்களில் தொடர்ந்து விதைக்கிறோம். பின்னர், வார்த்தையாகிய விதையை நாம் தொடர்ந்து விதைக்கும்போது, வார்த்தையானது விளைச்சலை உற்பத்தி செய்வதன்

மூலம் இன்னும் பல செழிப்பான மற்றும் ஏராளமான அறுவடைகளை நாம் அனுபவிப்போம்.

தேவனுடைய வார்த்தையாகிய விதையை நம் இருதயங்களில் விதைத்த பின், அந்த வார்த்தை நம் வாழ்வில் எவ்வாறு பலன்களை பிறப்பிக்கும் என்பதை நம்மால் முழுமையாக விளக்க முடியாமல் போகலாம். உதாரணமாக, வெற்றி மற்றும் செழிப்பு பற்றிய வார்த்தையாகிய விதையை விதைக்கும் ஒரு நபர், தான் செய்யும் எல்லாவற்றிலும் வெற்றி மற்றும் செழிப்பை அனுபவிப்பார். அதேபோல், சுகமளித்தலுக்கும் ஆரோக்கியத்திற்குமான தேவனுடைய வார்த்தையாகியவிதையைவிதைக்கும்ஒருநபர்,நோய்மற்றும் வியாதியிலிருந்து அவர்களைக் குணப்படுத்தி, அவர்களை நல்ல ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும் தேவனுடைய வல்லமையை எவ்வாறு அனுபவிப்பார் என்பதை நம்மால் முழுமையாக விளக்க முடியாது. வார்த்தையானது ஒரு விதை போன்றது என்பதை மட்டுமே நாம் கூற முடியும், மேலும் எப்படி என்று நமக்குத் தெரியாவிட்டாலும் விதை நிச்சயமாகப் பலனளிக்கும். வார்த்தை நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டு வளர்க்கப்படும்போது, அது எதற்காக உற்பத்தி செய்ய வடிவமைக்கப்பட்டதோ, அதை நிச்சயமாக உற்பத்தி செய்யும்.

# 8

# வெளிப்பாடு: ஆவிக்குரிய புரிதலைப் பெறுதல்

## வார்த்தையை நாம் புரிந்துகொள்ளாத நேரங்கள்

**மத்தேயு 13:19**

**ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.**

நாம் வார்த்தையைப் புரிந்துகொள்ளாதபோது, சாத்தான் நமக்குள் விதைக்கப்பட்ட விதையைப் பறித்து, அது நம் வாழ்வில் வேரூன்றி, விளைச்சலை உற்பத்தி செய்யாதபடி தடுக்கிறான் என்று கர்த்தராகிய இயேசு கூறினார். சாத்தான் வார்த்தையைத் திருடுவதைத் தடுக்க, நாம் வார்த்தையைப் புரிந்துகொள்ள வேண்டும் (ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்). வாக்குவாதங்கள், குழப்பங்கள், பொய்கள், வஞ்சகங்கள் போன்றவற்றின் மூலம் நாம் வார்த்தையைப் புரிந்துகொள்வதைத் தடுக்க சாத்தான் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வான்.

"புரிந்துகொள்" என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தையின் அர்த்தம் என்னவென்றால், "ஒன்றாக இணைத்தல், புரிதலைப் பற்றிக்கொள்ளுதல், அறிந்துகொள்ளுதல்" என்பதாகும். நாம் புத்திசாலித்தனமாகவும் அறிவுபூர்வமாகவும் வார்த்தையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றாலும், "வெளிப்பாடு" என்று நாம் அழைக்கும் ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்துகொள்ளுதல் என்ற அம்சமும் இதில் அடங்கியுள்ளது.

**லூக்கா 8:12**
**வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான்.**

நாம் வார்த்தையை விசுவாசிக்கும் இடத்திற்கு வருவதை சாத்தான் விரும்புவதில்லை. எனவே, நாம் வார்த்தையைப் பற்றிய வெளிப்பாட்டைப் பெற்று அதை விசுவாசிப்பதற்கு முன்பு, அவன் அந்த வார்த்தையை நம்மிடமிருந்து விலக்க முயற்சிக்கிறான். இருப்பினும், வார்த்தையின் வெளிப்பாட்டை நாம் புரிந்துகொண்டவுடன் அல்லது பெற்றுக்கொண்டவுடன், நாம் வார்த்தையை விசுவாசித்து நம் வாழ்வில் வார்த்தையின் வல்லமையை அனுபவிக்க முடியும்.

## வேத வாக்கியங்களும் மனித அறிவும்

**1 கொரிந்தியர் 2:14**
**ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.**

நமது அறிவின் திறனால்தான் வேதாகம வார்த்தைகளை நாம் வாசித்துப் புரிந்துகொள்கிறோம். எபிரேயம் மற்றும் கிரேக்க மொழிகளைப் படிக்கவும், வேதாகமம் எழுதப்பட்ட வரலாற்று பின்னணி மற்றும் சூழலைப் படிக்கவும் நமது அறிவை நாம் பயன்படுத்துகிறோம். தேவன் நமக்கு அறிவைக் கொடுத்திருக்கிறார், அதை நாம் நன்றாகப் பயன்படுத்த வேண்டும்.

இருப்பினும், தேவ ஆவியானவர் தமது வார்த்தையின் மூலம் வெளிப்படுத்தும் தெய்வீக சத்தியங்களை, சாதாரண மனதுடன் கூடிய சாதாரண மனிதனால் புரிந்துகொள்ள முடியாது. ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு

ஆவிக்குரிய பகுத்தறிவு (அல்லது ஆவிக்குரிய நுண்ணறிவு) அவசியம். இங்குதான் மனித அறிவின் திறன் முடிவடைகிறது மற்றும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் தொடங்குகிறது.

**1 கொரிந்தியர் 2:9-12**

**9 எழுதியிருக்கிறபடி:**
**தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை,**
**அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.**
**10 நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.**
**11 மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.**
**12 நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.**

தேவன் தமது பரிசுத்த ஆவியானவர் மூலம் ஆவிக்குரிய சத்தியத்தையும் ஆவிக்குரிய உண்மைகளையும் நமக்கு வெளிப்படுத்துகிறார் (திறக்கிறார், மறைப்பை அகற்றுகிறார்). இது தேவன் நமக்கு இலவசமாகக் கொடுத்த விஷயங்களை அறிய (புரிந்துகொள்ள, உறுதியாக இருக்க, பார்க்க, உணர) நமக்கு உதவுகிறது.

பரிசுத்த ஆவியானவர் வெளிப்பாட்டின் ஆவியானவர். வேதாகமத்தில் உள்ள தெய்வீக சத்தியங்களைக் காண அவர் நமக்கு உதவுகிறார். பூர்வகால மனிதர்களால் எழுதப்பட்ட வார்த்தைகளின் அர்த்தத்திற்கு அப்பால், தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சரியான எண்ணங்களுக்கு நேராக அவர் நம்மை அழைத்துச் செல்கிறார். மனிதனின் எண்ணங்களுக்கும் தேவனுடைய எண்ணங்களுக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. கர்த்தராகிய

ஆண்டவர் கூறினார், *“பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது”* (ஏசாயா 55:9).

வெளிப்பாடு என்பது ஒரு மனிதனின் அறிவுசார்ந்த புரிதலிலிருந்து ஆவிக்குரிய புரிதலுக்கு நேராகக் கடந்து செல்வதாகும். வெளிப்படுத்தல் மூலம்தான் நாம் தேவனுடைய எண்ணங்களைப் பெறுகிறோம். நம்மால் ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு நபர் ஆவிக்குரிய சத்தியத்தின் வெளிப்பாட்டைப் பெறாதபோது (அதாவது, வார்த்தையைப் பற்றிய ஆவிக்குரிய புரிதலைப் பெறாதபோது), என்ன நடக்கிறது என்பதை இயேசு இவ்வாறு கூறினார், *“... பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்”* (மத்தேயு 13:19).

## வெளிப்பாட்டிற்காக ஜெபித்தல்

**எபேசியர் 1:17-19**

**17 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்,**

**18 தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்;**

**19 தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.**

எபேசுவில் உள்ள விசுவாசிகளுக்காக பவுல்

ஜெபித்தபோது, அவர் குறிப்பாக ஞானத்தையும் தெளிவையும் அளிக்கும் ஆவியையும், அவர்களின் புரிதலுக்குத் தேவையான பிரகாசமுள்ள மனக்கண்களையும் (வெளிச்சத்தையும்) அவர்களுக்குத் தர வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறார், இதன் மூலம் அவர்கள் தேவனை அறிகிற அறிவை அடையவும், தேவனுடைய அழைப்பின் நோக்கத்தை அறியவும், தேவன் தமது ஜனங்களுக்குக் கொடுத்த மகிமையான சுதந்தரத்தை அறியவும், தேவன் தம் மக்களுக்குக் கிடைக்கச் செய்திருக்கிற வல்லமையின் மேன்மையை அறியவும் முடியும். எனவே, அத்தகைய ஆவிக்குரிய சத்தியத்தைப் பற்றிய அறிவும் புரிதலும் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு மற்றும் வெளிச்சத்தின் மூலம் வருகிறது. நாம் ஆவிக்குரிய சத்தியத்தை அறிந்துகொள்ளும்படி, பரிசுத்த ஆவியானவர் புரிந்துகொள்ளுதலுக்கான நமது மனக்கண்களை பிரகாசிப்பிக்கிறார் அல்லது ஒளிரச் செய்கிறார்.

வெளிப்பாடு என்ற செயல்பாட்டின் மூலம் நாம் ஆவிக்குரிய புரிதலைப் பெறும்போது, நாம் இயற்கையான சரீரப் பிரகாரமான தலை சார்ந்த அறிவிலிருந்து நம் ஆவியில் புரிந்துகொள்ளும் அறிவிற்கு கடந்து செல்கிறோம். இதுவே இயற்கை அறிவுக்கும் ஆவிக்குரிய அறிவுக்கும் அல்லது தலையிலிருந்து உண்டாகும் மனுஷ அறிவுக்கும் இதய அறிவுக்கும் உள்ள வித்தியாசமாகும். நம் இதயங்களில் (ஆத்துமா) எதையாவது நாம் அறியும்போது, நம் இதயத்தின் கண்கள் புரிந்துகொள்ளும்படி, அது பிரகாசிக்கப்படுகின்றன என்று அர்த்தம். எனவே, நாம் அதை உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்து விசுவாசிக்கிறோம். நாம் ஆவிக்குரிய சத்தியத்தை ஏற்றுக்கொள்கிறோம், விசுவாசிக்கிறோம், அதின்படி நடக்கிறோம் மற்றும் அனுபவிக்கிறோம்.

ஆகவே, நாம் வார்த்தையைக் கேட்கும்போது அல்லது வார்த்தையை வாசிக்கும்போது, அதில் உள்ள

வெளிப்பாட்டிற்காகவும் ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்துகொள்ளவும் நாம் ஜெபிக்க வேண்டும். நாம் வார்த்தையின் வெளிப்பாட்டைப் பெற்று அதை விசுவாசிக்கும்போது, சாத்தானால் அந்த வார்த்தையை நம்மிடமிருந்து திருடவோ அல்லது பறித்துக்கொள்ளவோ முடியாது. நாம் அதைப் பார்க்கிறோம். நாம் அதை விசுவாசிக்கிறோம். அது இப்போது நம்முடையது!

# 9

# அறுவடையைத் தடுப்பவைகள்: வார்த்தைக்கு எதிர்ப்பு தெரிவித்தல்

**மத்தேயு 13:20,21**

**[20] கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன்;**
**[21] ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்.**

**மாற்கு 4:16,17**

**[16] அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டும்,**
**[17] தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்.**

**லூக்கா 8:13**

**கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது, சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியினாலே, கொஞ்சக்காலமாத்திரம் விசுவாசித்து, சோதனைகாலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்.**

விதை வளர்ந்து கனி கொடுப்பதைத் தடுக்கும் காரணிகளாக இயேசு சுட்டிக்காட்டியவற்றை இப்போது நாம் ஆராய்ந்து பார்ப்போம். விதையில் எந்தத் தவறும் இல்லை. விதை என்பது தேவனுடைய வார்த்தை, எனவே, அது சரியானது. ஆனால் வார்த்தையாகிய விதை கனி கொடுப்பதைத் தடுக்கும் வெளிப்புற காரணிகள் உள்ளன.

இயேசு சொன்ன அறுவடையைத் தடுக்கக்கூடிய

வெளிப்புறக் காரணிகளில் ஒன்று, வார்த்தையின் நிமித்தம் ஏற்படும் உபத்திரவம் அல்லது துன்புறுத்தல் மற்றும் சோதனையின் காலமாகும்.

## வார்த்தைக்கு எதிரான எதிர்ப்புகள் மத்தியில் நிலைத்து நிற்றல்

நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக்கொள்ளும்போதுவார்த்தையின் நிமித்தம் வரும் உபத்திரவம் (துன்பம், மனஅழுத்தம்), துன்புறுத்தல் (மனிதர்களால் வரும் எதிர்ப்பு) மற்றும் சோதனை (சிரமங்கள், பாவம் செய்வதற்கான தூண்டுதல்கள்) போன்றவை இருக்கும். இந்த எதிர்ப்புகள் பெரும்பாலும் நாம் வார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக்கொள்ளும் அதே பகுதிகளில்தான் இருக்கும். சில சமயங்களில், வார்த்தையால் கேட்டறிந்த சத்தியத்தை சந்தேகிக்கவும், கேள்வி கேட்கவும், பகுத்தறியவும் செய்வதன் மூலம் பயம் அல்லது அவிசுவாசத்துக்குள் செல்வதற்கான தூண்டுதல்களாக சாத்தானின் சோதனைகள் மாறிவிடும். எதிர்ப்பின் தன்மை மற்றும் மூல ஆதாரமானது, உபத்திரவம், துன்புறுத்தல் அல்லது சோதனை என எதுவாக இருந்தாலும் சரி, நாம் ஏற்றுக்கொண்ட வார்த்தையை விசுவாசித்து உறுதியாக நிற்க வேண்டும். நாம் வார்த்தையைப் பற்றிக்கொண்டு, அது நம் வாழ்க்கையில் விளைச்சலை உற்பத்தி செய்யும்படி, நம் இதயங்களில் வேரூன்ற அனுமதிக்க வேண்டும்.

உதாரணமாக, தெய்வீக சுகமளித்தல் பற்றிய வார்த்தையை நாம் கேட்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். தெய்வீக சுகமளித்தலின் வெளிப்பாடு நம்மை மகிழ்ச்சியாலும் மிகுந்த உற்சாகத்தாலும் நிரப்புகிறது. அதன் பிறகு சிறிது நேரத்தில், நாம் ஒருவித நோயின் அறிகுறியை உணர்கிறோம். நாம் என்ன செய்வோம்? "சரி, அது எல்லோருக்கும் பொதுவானது இல்லை" என்றோ அல்லது "ஒருவேளை தெய்வீக சுகமளித்தல் ஆரம்பகால திருச்சபைக்கு மட்டுமே இருந்தது, இன்று

நமக்கு இல்லை" என்றோ அல்லது வேறு ஏதேனும் இதே போன்ற வாதத்தைச் சொல்லியோ தெய்வீக சுகமளித்தல் பற்றிய அந்த வார்த்தையை நாம் நிராகரிக்கிறோமா? அல்லது மீண்டும் வாசிக்கும்படி, மீண்டும் கேட்கும்படி, மீண்டும் தியானிக்கும்படி, தெய்வீக சுகமளித்தல் பற்றிய வார்த்தையால் நம் ஆவிகளுக்கு இன்னும் உணவளிக்கும்படி நாம் முழுமனதோடு அந்த வார்த்தைக்குத் திரும்பிச் செல்கிறோமா? தெய்வீக சுகமளித்தல் பற்றி நாம் கேட்ட வார்த்தையானது நமக்குள் ஆழமாக வேரூன்றும் வகையில் பிந்தைய செயல்களைச் செய்வது அவசியமாகும்.

**வார்த்தை உங்களுக்குள் ஆழமாக வேரூன்றுவதாக**
நாம் மிகுந்த உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் வார்த்தையை ஏற்றுக்கொண்டவர்களாய் இருக்கலாம். இருப்பினும், வார்த்தை உண்மையில் "வேரூன்றி," அதாவது, நம் இருதயங்களில் ஆழமாகச் சென்று, நமக்குள் உறுதியாக நிலைத்திருக்கும்படி, காலப்போக்கில் நாம் வார்த்தையில் நிலைத்திருப்போமா இல்லையா என்பதுதான் உண்மையான சோதனையாகும். வார்த்தை நம்மில் ஆழமான வேர்களைக் கொண்டிருக்கவில்லை என்றால், தடுமாறி (கோபமடைந்து, தடுமாறிவிழுந்து) கீழே விழுந்து (பின்வாங்கி, விலகி) நாம் வார்த்தையைவிட்டு போகலாம்.

வார்த்தை நம்மில் ஆழமாக வேரூன்ற, நாம் தொடர்ந்து வார்த்தையைப் புசித்து, வார்த்தையின் வெளிப்பாட்டை வலுப்படுத்த வேண்டும். சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போதும், வார்த்தைக்கு நேரடி எதிர்ப்பு இல்லாதபோதும் இதைச் செய்ய வேண்டும். பொதுவாக, ஒரே செய்தியை மீண்டும் மீண்டும் கேட்கும்போது – அதே வார்த்தை நமக்குக் கொண்டுவரப்படுவதைக் கேட்கும்போது– நாம் அதைக் கேட்காமல் இருக்கும்படி நிறுத்திவிடுவதற்கான மனநிலை நமக்கு உண்டு. ஆனால், அது நமக்குள்

ஆழமாக வேரூன்றவும், வார்த்தைக்கான எதிர்ப்பை நாம் எதிர்கொள்ளும்போது நாம் நிலைத்திருக்கவும், நாம் அதை மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும். எபிரெயர் 2:1 கூறுவது போல் நாம் கவனமாக இருக்க வேண்டும்: *"ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்."*

நீங்கள் கேட்ட வார்த்தை உங்களில் ஆழமாக வேரூன்றும்படிக்கு, நீங்கள் ஏற்றுக்கொண்ட சத்தியம் மற்றும் வெளிப்பாட்டை தொடர்ந்து உங்கள் ஆத்துமாவிற்கான போஷாக்காக கொடுங்கள். இது கடினமான காலங்களில் நீங்கள் சோர்வடைந்து பின்வாங்காமல் இருப்பதை உறுதி செய்யும்.

# 10

# அறுவடையைத் தடுப்பவைகள்: வார்த்தையை நெருக்கும் முட்கள்

**மத்தேயு 13:22**

**முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்து, உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான்.**

**மாற்கு 4:18,19**

**18 வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்.**
**19 இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்.**

**லூக்கா 8:14**

**முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன்கொடாதிருக்கிறார்கள்.**

இயேசு சுட்டிக்காட்டியவைகளில் அறுவடையைத் தடை செய்பவைகளின் அடுத்த தொகுப்பு வார்த்தையை நெரிக்கும் முட்களாகும். முட்கள் இந்த உலகத்தின் கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம், மற்ற பொருட்கள் மீதான ஆசை மற்றும் வாழ்க்கையின் இன்பங்களைக் குறிக்கின்றன. இவை அனைத்தும் ஏற்படுத்தும் ஒரு பொதுவான தாக்கம், கவனச்சிதறல். அவை நமது குறிக்கோளையும் கவனத்தையும் வார்த்தையைவிட்டுத் திருப்பி மற்ற விஷயங்களின் மீது செலுத்த வைக்கின்றன. எனவே, இவை போதுமான வெளிச்சம், நீர் மற்றும் ஊட்டச்சத்துக்கள் வளர்ந்து வரும்

நிலையில் உள்ள சிறு செடியை அடைவதைத் தடுக்கும் முட்களைப் போல செயல்படுகின்றன, இதன் மூலம் இறுதியில் அதை அழித்துவிடுகின்றன. இதுதான் நமக்கும் நடக்கிறது. நமது கவனம் திசைதிருப்பப்பட்டு மற்ற விஷயங்களில் மூழ்கி, நம் இதயங்களில் வார்த்தையைப் பாதுகாப்பதையும் வளர்ப்பதையும் புறக்கணிக்கிறோம். இறுதியில், வார்த்தை நம் வாழ்வில் பலனற்றதாகிறது.

## வேதவசனத்தை நெரிக்கும் முட்களுக்குத் தப்பி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்

நாம் இந்த உலகத்தின் கவலைகளுக்கும், ஐசுவரியத்தின் மயக்கத்திற்கும், மற்ற பொருட்கள் மீதான ஆசைக்கும், வாழ்க்கையின் இன்பங்களுக்கும் தப்பும்படி, நம் இருதயங்களைப் பாதுகாக்க வேண்டும். நம் அனைவருக்கும் கவலைகள் (நாம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள்) இருந்தாலும், நாம் ஐசுவரியத்தைக் கையாள வேண்டி இருந்தாலும் (பணம், நிதி, செல்வம்), மற்ற பொருட்கள் மீதான ஆர்வங்களைக் கொண்டிருந்தாலும், நியாயமான இன்பங்களை (நல்ல விஷயங்கள்) அனுபவிக்க வேண்டியிருந்தாலும், இந்த விஷயங்களால் நம் இருதயங்கள் தேவனிடமிருந்தும் அவருடைய வார்த்தையிலிருந்தும் விலகிச் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

முட்களுக்கு விலகி நம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான சில நடைமுறை வழிகள் இதோ.

1) தேவன் மீதும் அவருடைய வார்த்தை மீதும் உங்கள் அன்பை உறுதிப்படுத்துங்கள்.

2) உங்கள் சொந்த இதயத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.

## *தேவன் மீதும் அவருடைய வார்த்தை மீதும் உங்கள் அன்பை உறுதிப்படுத்துங்கள்*

சங்கீதம் 119-ல் சங்கீதக்காரன் செய்தது போல, தேவன் மீதும்

அவருடைய வார்த்தை மீதும் நம் அன்பையும் ஆர்வத்தையும் அடிக்கடி உறுதிப்படுத்துவது உண்மையிலேயே அற்புதமானது.

தேவனுடைய வார்த்தையின் மீது நம் அன்பை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதை சங்கீதம் 119-லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்கள் இங்கே நமக்குக் கற்பிக்கின்றன.

**சங்கீதம் 119:16,36,37,47,72,97,127,162**

**16 உமது பிரமாணங்களில் மன மகிழ்ச்சியாயிருக்கிறேன்; உமது வசனத்தை மறவேன்.**

**36 என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்.**

**37 மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்.**

**47 நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின்பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பேன்.**

**72 அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்.**

**97 உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம்.**

**127 ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன்.**

**162 மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறதுபோல, நான் உமது வார்த்தையின் பேரில் மகிழுகிறேன்.**

## *உங்கள் இதயத்தைக் காத்துக்கொள்ளுங்கள்*

நம் இதயங்களின் ஆசாபாசங்களையும், ஆர்வங்களையும் நாம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். நமது ஆர்வங்கள் எங்கே இருக்கின்றன, அவை எதில் உள்ளன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமது ஆதி அன்பிலிருந்து நாம் திசைதிருப்பப்படுவதாகவோ அல்லது விலகிச் செல்வதாகவோ உணரும்போது, அதை அறிக்கையிட்டு, நம் இதயங்களைத் திருப்பி, நம்மைத் தம்மிடம் திரும்ப இழுக்கும்படி கர்த்தரிடம் கேட்க வேண்டும். முழுமனதுடனும்

நடைமுறைப் பயிற்சியிலும் தேவனைத் தேடுவதன் மூலம் நம் வாழ்க்கையில் அவருக்கு முதலிடம் கொடுப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் (மத்தேயு 6:33). ஆராதனை, ஜெபம் மற்றும் தேவனுடைய வார்த்தையில் தேவனுடன் கூட அவரது பிரசன்னத்தில் இருக்கும்படி நேரத்தையும் இடத்தையும் ஒதுக்குங்கள். *"... ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்"* (சங்கீதம் 62:10).

# 11

# மூன்று திறவுகோல்கள்: புரிந்துகொள், ஏற்றுக்கொள், தக்கவைத்துக்கொள்

வார்த்தையாகிய விதை படிப்படியாக நம் வாழ்வில் எதனால் விளைச்சலை உற்பத்தி செய்கிறது என்பதை கர்த்தராகிய இயேசு நமக்கு வெளிப்படுத்தினார். மூன்று சுவிசேஷங்களும் இவற்றை எவ்வாறு பதிவு செய்கின்றன என்பதைப் பார்க்கும்போது, நாம் வார்த்தையைப் புரிந்துகொண்டு (மத்தேயு 13:23), ஏற்றுக்கொண்டு (மாற்கு 4:20) மற்றும் நம் இருதயங்களில் தக்கவைத்துக்கொள்ளும்போது (லூக்கா 8:15), நம் வாழ்வில் கனிகளைக் கொடுப்போம் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்.

## புரிந்துகொள்

**மத்தேயு 13:23**

**நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.**

முந்தைய அத்தியாயத்தில், ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தையும், வெளிப்பாட்டைப் பெறுவதன் முக்கியத்துவத்தையும் நாம் ஆராய்ந்து பார்த்தோம். நமது இருதயங்களுக்கு ஆவிக்குரிய சத்தியத்தை வெளிப்படுத்துவது படிப்படியாக நடைபெறுகிறது. பரிசுத்த ஆவியானவரால் நமது இருதயங்களில் மேலும் மேலும் வெளிச்சம் பாய்ந்து வருவதால், ஆவிக்குரிய சத்தியத்தை நாம் படிப்படியாக தெளிவாகக் காண்கிறோம். அவருடைய வார்த்தையில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள சத்தியத்தின்

பல்வேறு பகுதிகள் குறித்த வெளிப்பாட்டை நாம் தொடர்ந்து பெற வேண்டும். நமது கர்த்தரைப் பற்றிய நமது அறிவில் நாம் தொடர்ந்து வளர்ந்து பெருக வேண்டும் (கொலோசெயர் 1:10), கிருபையிலும் அறிவிலும் தொடர்ந்து வளர வேண்டும் (2 பேதுரு 3:18), நமது அறிவில் புதுப்பிக்கப்பட வேண்டும் (கொலோசெயர் 3:10), கிறிஸ்துவின் அன்பைப் புரிந்தவர்களாகவும் அறிந்திருக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் (எபேசியர் 3:18,19) மற்றும் தேவ குமாரனைப் பற்றிய அறிவுக்குள் வர வேண்டும் (எபேசியர் 4:13). நமது ஆவிக்குரிய பயணமானது நமது தேவனைப் பற்றிய வெளிப்பாடு, அவரது நோக்கங்கள், அவர் நமக்காக வைத்திருக்கும் சுதந்திரம், அவர் நமக்குக் கிடைக்கும்படி செய்த வல்லமை போன்றவற்றில் நாம் வளர்ந்து பெருகுவதற்கான தொடர்ச்சியான வளர்ச்சியாகும்.

ஆகவே, தொடர்ந்து வார்த்தையைக் கேளுங்கள். தொடர்ந்து வார்த்தையைத் தியானியுங்கள். தொடர்ந்து வேதவசனங்களைப் படியுங்கள். கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் பயணத்தின் அனைத்து பகுதிகளிலும் வெளிப்பாட்டையும் புதிய நுண்ணறிவையும் தொடர்ந்து பெறுங்கள். சங்கீதக்காரனைப் போலவே, நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும், *“உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.”* (சங்கீதம் 119:18).

## ஏற்றுக்கொள்

**மாற்கு 4:20**

**வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்.**

நாம் வார்த்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும், தழுவிக்கொள்ள வேண்டும்,

